உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 5 } இரௌத்திரிஸு வைகாசிமீ கஉ 1920 ஸு மேமீ 14உ { பகுதி 11

கடவுள் வணக்கம்.

ஆங்கார மானகுல வேடவெம் பேய்பாழ்த்த
வாணவத் தினும்வலிது காண்
அறிவினை மயக்கிடு நடுவறிய வொட்டாதி
யாதொன்று தொடினு மதுவாய்த்
தாங்காது மொழிபேசு மரிகரப் பிரம்மாதி
தம்மொடு சமான மென்னும்
தடையற்ற தேரிலஞ் சுருவாணி போலவே
தன்னிலசை யாது நிற்கும்
ஈங்கா ரெனக்குநிக ரென்னப்ர தாபித்
திராவணா கார மாகி
இதயவெளி யெங்கணுந் தன்னரசு நாடுசெய்
திருக்குமித னொடை நேரமும்
வாங்கா நிலாதடிமை போராட முடியுமோ
மௌனோப தேச குருவே
மாத்ரகுரு வேயோக தந்தரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே.

தனியி ருந்தருட் சகசமே பொருந்திடத் தமியேற்
கினியி ரங்குதல் கடனிது சமயமென் னிதயக்
கனிவு மப்படி யாயின தாதலாற் கருணைப்
புனித நீயறி யாததொன் றுள்ளதோ புகலாய்
பின்னு முன்னுமாய் நடுவுமா யாவினும் பெரிய
தென்னுந் தன்மையா யெவ்வுயிர்த் திரளையு மியக்கி
மன்னுந் தண்ணருள் வடிவமே யுனக்கன்பு வைத்தும்
துன்னு மின்னலேன் யானெனு மகந்தையேன் சொல்வாய்.

ஆனந்தபோதினி

இரௌத்ரி ௵ வைகாசி ௴ ௧௬

அகங்காரம்

அகங்காரம், அகம், கருவம், அகந்தை என்பன ஒரு பொருட் சொற்கள். அகங்காரம் என்பது மானிடர்க்குப் பிரவிக்குணமாய மைந்துள்ள தொன்று. இது அந்தக்கரணத்தில் .பிருதிவியின் கூறு. ஆகையால் கடினமான சுபாவமுடையது. இது பிறவிக்கு வித்தாக விருப்பதால் இதை யான்றோர் மகா கொடிய தென்று வெறுத்து நீக்குவர். இக்குணம் மேலெழும்பி வரும்போது பெரியோரென்றும் சிறியோரென்றும், பாப மென்றும் புண்ணிய மென்றும் பகுத்தறிய வொட்டாது அறிவினை மயக்கிவிடும். கடவுளின் பிரதி நிதியாகத் துஷ்டநிக்ரகச் சிட்ட பரிபாலனம் செய்யும் ஏகசக்ராதிபதியைக் கூட இலட்சியம் செய்யாது, அவனென்ன ஒரு துரும்புக்குச் சமானம் என்னும். தூணைத் துரும்பாகவும் துரும்பைத் தூணாகவும் மதிக்கும். எனக்கு ஒருவரும் நிகரில்லை யென்று தடிப்புற்று நிற்கும். ஆங்காரத்தைப்பற்றி மேல் கடவுள் வணக்கத்தில் கூறப்பட்ட முதலி பாசுரம் ஈண்டு சிந்திக்கத் தக்கது.

கல்வி, செல்வம், தேகபலம், அதிகாரம் முதலியவைகள் அறிவிற் குறைந்தோரின் அகங்காரத்தை மேலெழுப்பும் கருவிகளாக விருக்கின்றன. மற்றவைகளை விடக் கல்வி அகங்காரத்தை யுண்டாக்குகிற தென்பது சிலர்க்கு வியப்பை யளிக்கலாகும். கல்வி அடக்கம், ஒழுக்கம், முதலிய நற்குணங்களை யளிக்குமென்றும், ஞானத்தையே யளிக்க வல்ல தென்றும் கூறப்பட்டிருக்கும்போது, அது எப்படி அகங்காரத்தை யுண்டாக்கும் என்று ஐயந் தோன்றலாகும். கல்வி இருவகை. பொருள் சம்பாதிக்கவும், நல்ல பண்டிதன் என்று புகழ் பெறவும் கற்பது ஒருவிதக் கல்வி. அறிவை விர்த்தி செய்து ஞானமடைந்து யாவற்றிற்கும் மூலகாரணமாகிய பரம்பொருளை யறியக் கற்பது இன்னொருவிதக் கல்வி.

ஆன்றோர்கள் நூல்களை யெழுதி யிருக்கும் காரணம், நமது தன்மையையும் நமக்கு உயிர்த்துணையாகிய ஆண்டவன் தன்மை

யையும், அவனால் படைத்தளித் தழிக்கப்பட்ட இப்பிரபஞ்சத்தின் தன்மையையும், இவற்றோடு நமக்கிருக்கும் சம்பந்தமாதிகளையும், நாம் மோக்ஷ மடையும் மார்க்கத்தையும் நமக்கு அறிவித்தற் பொருட்டே யாகும். மனிதர் ஒருவர் எண்ணத்தை யொருவர்க் கறிவிப்பது சத்தத்தின் மூலமாகவே. அம்மட்டோடிருப்பின் எதிரில் தான் ஒருவருக்கொருவர் தம் எண்ணங்களை வெளியாக்கிக் கொள்ளலாம். தூரத்தி லுள்ளவர்களுக்கு நம் எண்ணங்களை யறிவிக்கவாவது, அவற்றைப் பின்னால் நாமே மறந்து விடின் தெரிந்து கொள்ளவாவது, பிற்காலங்களில் வேறு யாரேனும் அறிந்துக் கொள்ளும் வண்ணம் சேமித்து வைக்கவாவது முடியாது.

ஆகையால் சத்தம் அல்லது ஒலிக்கு ஒரு வடிவத்தை யேற்படுத்தினார்கள். இவ்வாறாகப் பலவித ஒலிகளுக்குப் பல வடிவங்கள் ஏற்பட்டன. இந்த வடிவங்களையே நாம் எழுத்துகள் என்கிறோம். இந்த எழுத்துகளில் சில சில சேர்ந்து பொருள், இடம், காலம், குணம், தொழில் இவற்றைக் குறிக்கும் வண்ணம் அமைத்திருக்கிறார்கள். இந்த வார்த்தைகள் அமைந்திருக்கும் இலக்ஷணம், ஒரு வார்த்தை யோடு ஒரு வார்த்தை சேரும்விதம், பல வார்த்தைகள் சேர்ந்து ஒருவாக்கியமாகும்விதம்,இவற்றி லுள்ள அர்த்தப்பேதங்கள், வார்த்தைகளைச் சேர்த்துப் பல விதக் கவிகளாகச் செய்தல் முதலிய இத்தகைய விஷயங்களைப் பற்றி போதிப்பனவே இலக்கிய இலக்கண நூல்களாகும். ஆன்றோர் நூல்களிலுள்ள விஷயங்களை யுள்ளபடி யுணர்வதற்கு இவற்றின் ஞானம் உதவியாகிறது. ஆனால் இவற்றில் மட்டும் ஒருவன் எவ்வளவு தேர்ச்சி யடைந்து விடினும் அதனால் அறிவு விளங்காது. இக்கல்வியே அகங்காரத்தைக் கொடுப்பது. இது ஒருவனுடைய இயற்கைக் குணத்தையே யதிகமாக்குமன்றி துர்க்குணத்தைப் போக்கி நற்குணத்தை யுண்டாக்காது.

ஆன்றோர் நூல்களின் விஷய ஞானமே அறிவைவிளக்கி ஞானத்தை யடையச் செய்யும். இதுவே கல்வியாலாய பயனை யளிப்பது. ஒருவன் கல்வி கற்க வேண்டியது தன்னையும் தன் உயிர்க்குயிராகிய ஆண்டவனையும் உணர வேண்டியே. "கற்றதும் கேள்வி கேட்டதும் நின்னைக் கண்டிடும் பொருட்டன்றோகாணே" என்றனர் தாயுமானவர்.

கல்வி கற்று அகங்காராதிகளை யொழித்து இறைவனடிபேணி நற்கதியடைவதை விட்டு, நாம் கற்றுணர்ந்த வித்வான் என்று தம்மைத் தாமே மதித்து அகங்காரம் கொள்வது, குளிக்கப்போய்சேறு பூசிக் கொள்வதாகும். மேலும் எப்போதும் நம்மிலும் அதிகம் கற்றோர் எண்ணிறந்தோர் உண்டு. அவ்வாறே நம்மிலும் குறைந்த கல்வி யுடையோரும் உண்டு. முழுமையுங் கற்றவன் எவனுமில்லை.

ஆகையால் இதில் அகங்காரம் கொள்வது மிக்க ஈனச்செய்கையே யாகும்.

பொருட் செல்வமும் ஒருவனுடைய சுபாவ குணத்தையே யதிகமாக்கும். நல்லறிவுடையோ னிடம் பொருள் சேரின் அவன் அதைக் கொண்டு மிக்க புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொண்டு மறுமைப் பயனை யடைவான். அயோக்கியனிடம் சேரும் பொருள் அவனையே கொல்லும் வாள் போன்றது. செல்வத்தால் பெரும் பாலும் துன்பமே. இது நிலையில்லாதது. இதனு லகங்காரங் கொள்வது பாபத்திற்கே ஏதுவாகிறது.

பொதுவாய் அகங்காரம் என்பதை எந்த விஷயத்தினுல்அடைந் தாலும், அது பல்வகைத் துன்பங்களையும் இவ்வுலகில் இழிவையும் மறுமையில் நரகத்தையுமே யளிக்கும். இந்த நான் என்கிற அகங் கார முடையோர், எவ்வளவு செல்வந்தராயினும், எவ்வளவு தேக வலி துணைவலி யுடையவராயினும் முடிவில் அழிந்தே போவார்கள். இரணியன் "எனக்கு நிகர் ஒருவருமே யில்லை. அரியயனுதி தேவரும் மற்றையாவரும் என்னையே தெய்வமாகக் கருத வேண்டும்" என்று அகங்காரம் கொண்டனன். கடைசியில் அதன் பயனுகப் புத்திர மித்திர களத்திராதியோடு மாண்டொழிந்து இப்பூவுலகில் நிலை யான அபகீர்த்தி யடைந்தான்.

நான் என்ற அகங்காரத்தை விட்டோரே சுகமடைவர். அவர் கள் தங்களை யாவரினும் தாழ்ந்தவராகவே கருதிக் கொள்வார்கள். நான் பெரியவன் என்ற எண்ணமே அவர்களிடம் தலைகாட்டாது. அவர்களே யுண்மைப் பெரியோர்கள்.

"தாம்பெரிய ரென்னுமதை நாடா திருக்குமவர்
தாம்பெரிய ரென்றுமறை சாற்றியிடும்—"

என்று ஆன்றோர் கூறியுள்ளார்.

அகங்காரம் அதை யுடையவனை யழித்து விடும் என்பதற்குத் திருட்டாந்தமாக ஒரு சிறு கதையைக் கூறி இவ்வியாசத்தை முடி த்து விடுகிறோம்.

"ஓர் வனத்தில் ஒரு வேங்கை யரசனுகவும், ஓநாயும் குள்ள நரியும் அதன் அமைச்சர்களாகவும் இருந்தன. ஒரு நாள் வேங்கை ஒரு மாடு, ஒரு ஆடு, ஒரு முயல் மூன்றையும் வேட்டை யாடிக் கொண்டு வந்து, தன் மந்திரிகளில் முன்னே ஓநாயை யழைத்து "இந்த மூன்றையும் எவ்வாறு எந்தெந்தக் காலங்களில் புசிக்க லாம்?" என்று வினவியது.

ஓநாய் "இராஜனே! தாங்களே மூன்றையும் வேட்டையாடி வந்ததால் மூன்றிலும் பெரிதாகிய மாட்டைத் தாங்கள் இஷ்டமான வேளைகளில் புசிக்கலாம். நான் பெரிய மந்திரியாதலால் ஆட்டை யெடுத்துக் கொள்கிறேன்; நரிக்கு முயல் போதும்" என்றது.

இதைக் கேட்ட வேங்கை மிக்க கோபமடைந்து "அட அகங்காரம் கொண்ட பயலே! எனக்குச் சமமாக உன்னை மதித்துக் கொண்டு உனக்கும் ஒன்று என்று நீயா எனக்குப் புத்தியும் நியாயமும் கூறிப் பாகம் பிரித்து வைப்பவன்" என்று கூறி ஓநாய் மேல் பாய்ந்து அதைப் பிய்த்தெறிந்து விட்டது.

அதன் பிறகு வேங்கை நரியை யழைத்துக் கேட்டது. ஓநாய் பட்ட கதியை யுணர்ந்து கொண்ட நரி "மகாராஜா! ஆடு மிருதுவான மாமிச முடையததாதலால் ஆட்டைத் தாங்கள் இப்போதே புசித்து விடலாம். அதில் மிஞ்சியதையும் முயலையும் இரவிற்கு இலகு போஜனமாகக் கொள்ளலாம். நாளைக்கு மாட்டைப் புசிப்பீர்களாயின் அதற்குள் அது மிருது வடைந்திருக்கும். ஊழியம் செய்ய வேண்டியதையே கடமையாக வுடைய சிறியேன் மகாராஜா அவர்களுக்கு யோசனை கூறத் தக்க தகுதி யுடையவனல்ல. ஆயினும் எஜமான் கட்டளைக்கு மறுத்துக் கூறலாகாதாகையால், என் சிற்றறிவிற் கெட்டியதை விண்ணப்பித்துக் கொண்டேன்; என்னை யறியாது பிழை செய்துவிட் டிருப்பேனேல் மன்னிக்கப் பிரார்த்திக்கின்றேன்" என்று கூறியது.

வேங்கை "பேஷ், நீயே மந்திரி வேலைக்குத் தக்கவன், உன்னைப் போஷிப்பது என் கடமையாதலால் ஆட்டையும் முயலையும் நீயே புசி. எனக்கு மாடே போதும்" என்றது. நரி "எஜமான் சித்தப்படி" என்று கூறி ஆட்டையும் முயலையும் எடுத்துச் சென்று திருப்தியான விருந்துண்டு களித்திருந்தது.

இவ்வாறே நாமும் நான் என்கிற அகங்காரத்தை விட்டு அடிமையைப் போல் நம்மை மதித்து நடந்தால் நரியைப் போல் நன்மை பெறலாம்; இன்றேல் ஆங்காரம், ஓநாய் அடைந்த கதிபோல் நம்மையும் அழியச் செய்யும். அப்பர் சுவாமிகள் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வாக்கியம் இதை நன்கு விளக்குகிறது.

நான் என்ற அகங்காரம் ஒழிந்தால் மனச்சலனம் ஒழிந்து சுத்த சத்துவமாகிய சாந்தநிலை சித்திக்கும். சித்திரத்தில் எழுதப் பட்ட தீபம் போலும், அலையற்ற கடல்போலும், அசைவற்ற அச்சாந்த நிலையே சாக்ஷியாகிய நிலை. அதுவே தன் மெய்ச் சொரூபம்.

"சாந்தமே தற்சாட்சி தற்சாட்சியேபிரமம்
போந்த பிரமமே பூரணமா—மாய்ந்துணர்ந்த
சுத்தபரி பூரணமே தோன்றாச் சுவானுபவஞ்
சித்தநிலை தானே சிவம்" (சொரூப சாரம்)

ஆதலின் பிறப்பிற்கு ஏதுவாகிய இக் கொடிய ஆங்காரத்தினை யொழிக்க முயல்வது அறிவாளிகளின் கடமையாகும்.

ஓம் தத்ஸத்

பிழைதிருத்தம்.

சித்திரை மீ (10-ம் பகுதி) சஞ்சிகையில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கும் வைகாசிமாத பஞ்சாங்கத்தின் இரண்டாவது பத்தியில் ஏப்ரல்—மேமூ என்பவற்றை முறையே மே—ஜூன்மூ என்று திருத்திக்கொள்ளவும்.

பத்திரிகாசிரியர்.

சமூக ஊழியம்

நமது அரிய சகோதர சகோதரிகளே!

தன் குடும்பத்தாருக்கோ, அல்லது தன் மதஸ்தர் எல்லோருக்குமோ, அல்லது நாட்டு ஜனங்கள் எல்லோருக்குமோ, தனித்தஆட்களை யல்லாமல், பொது ஜனத்தை, அவர்களுடைய குணம், குலம், தொழில், செல்வம் முதலியவைகளைக் கவனியாது மேன்மைக்குக் கொண்டுவரும் நோக்கத்தோடு செய்யப்பட்ட எவ்வித முயற்சியும் சமூக ஊழியம் எனப்படும்.

இந்தியா இப்பொழுது இருக்கும் ஸ்திதி அவ்வித உதவியைப் பெரிதும் நாடி நிற்கிற தென வெள்ளிடை மலை போல் தெரிகிறது. சில கற்றறிந்த நாகரீக மனிதர்களைத் தவிர பெரும் பான்மையோர், எவ்விதம் மற்றவருக்கு உதவிசெய்வது, அதனால் என்ன பயன் என்பதையே சற்றேனும் அறியாதவர்கள். அது என்ன காரண மென்று யோசிக்கு மளவில் அதற்கு அறியாமையும் கல்வியின்மையுமே முக்கிய காரண மென எளிதில் அறிந்து கொள்ளலாம். நாம் அவர்களுக்கு இவ்வுதவிகளின் விதத்தையும் அவற்றின் பெருமையையும் சற்று எடுத்துரைப்போ மாகில் அவர்களுக்கு அதன் பேரில் உண்டாகிற ஆர்வமே போதிய சான்றாகும். உதாரணமாக, சென்ற வாரம் நடந்த ஒரு சம்பவத்தை எடுத்துக் கொள்வோம். 2- அல்லது 3-வயது சென்ற ஒரு குழந்தை இவ்வூரின் கண்ணுள்ள தெப்பக் குளத்தில் விழுந்து விட்டது. மற்ற ஜனங்கள் எல்லோரும் கும்பலாய்க் கூடிக் கொண்டு குழந்தையினுடைய வயதையும், குலத்தையும், அழகையும் பற்றி வர்ணித்துக் கொண்டு இருந்தார்களே யொழிய அத்தனை பேரில் "அதுவும் நம்மைப் போன்ற ஜீவனை யுடையது தானே குலத்தில் வேறாக இருப்பினும் அதை நாம் காப்பாற்றுவது நமது கடமை" என்று இறங்கி எடுத்தவர் ஒருவருமிலர். ஆனால் யான் சிறிது காலமாகச் சேர்ந்து வரும் மாணவர் சமூக ஊழிய சங்கத்தின் அங்கத்தினர்கள் வந்து தக்க உதவி புரிந்தனர். இதற்கு முக்கிய காரணம் கல்வி யறிவின்மையே. நாம் முன் சொன்ன உதாரணத்தைப் போன்றும் இன்னும் அநேக விதமானவைகளும் பல இடங்களில் நடக்கின்றன. அங்கு அவ்வாறு நடை பெறும் சம்பவங்களும் அதே மாதிரியான வைகளே. அவ்வித உதவி செய்யும் சில வழிகள் எவையெனின், நாம் வசிக்கும் நாட்டிலோ அல்லது பக்கத்து கிராமத்திலோ வுள்ள ஒவ்வொரு தெருவிற்கும் சென்று, முக்கியமாகக் கல்வியின் வாசனையே சிறிதுமில்லாத பஞ்சமர்களின் இருப்பிடங்களுக்குச் சென்று, அவர்கள் குடியிருக்கும் இடங்களைச் சுத்தமாய் வைத்திருக்கும்படி யாகவும், குழந்தைகளைப் போஷிக்கும் வழிகளையும்,

மற்றும் சுகவழி, சரீர சாஸ்த்திரம், நன்னெறி முதலியவற்றையும் அவர்களுக்குப் போதித்து வருதல் முதலானதும்,

அவர்களை ஒரு இடத்தில் கூடும் படியாகச் செய்து நல்ல புஸ்தகங்களைப் படித்துக் காண்பிப்பதும்,

கிராமாந்திரப் பாடசாலைகளுக்குச் சென்று அங்கு கல்வி கற்று வரும் மாணவரைச் சந்தித்து அவர்களுக்குப் பலவித வெகுமதிக ளளித்து கல்வியில் ஊக்கமும், ஆசையும் வுண்டாகும் படியாகச் செய்தலும்,

முதல் உதவியின் அத்தியாவசியத்தைப் போதித்தலும், அதற்கு அவ்வூரிலேயே சற்று கற்றுத் தேர்ந்தவரைப் பழக்கி வைப்பதும்,

வழியிடத்தில் அநாதரவாகவும், நடக்கச் சக்தி யற்றும் இருக்கும் வியாதியஸ்தரை வைத்திய சாலைக்கு அழைத்துப்போய் மருந்து முதலியவை போடச் செய்வது, அல்லது வைத்தியரை நோயாளியினிடம் அழைத்து வருவது முதலான அநேக வகைகளாம்.

மனிதர் வாழ்க்கையானது மிகவும் அற்ப வாழ்நாளையுடையது. இதைக் கபிலர் தன்னுடைய அகவலில் மிகவும் நன்ருய் வர்ணித்திருக்கின்றனர். மற்றும் பட்டிணத்துப் பிள்ளையாரும்,

“அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே விழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மி யிரு
கைத்தலைமேல் வைத்தழும் மைந்தரும் சுடுகாடு மட்டே
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே”,

என்றும் மற்ருெரு இடத்தில்:—

“கட்டி யணைத்திடும் பெண்டீரு மக்களுங் காலத் தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போற் சரீரத்தை வீழ்த்தி விட்டாற்
கொட்டி முழக்கி யழுவார் மயானம் குறுகியப்பால்
எட்டி அடிவைப்பரோ இறைவா கச்சி யேகம்பனே”

என்றும் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றனர். கடைசியாக நாம் இம்மண்ணுலகை விட்டு விண்ணுல கடைந்த பிறகு நம்மைத் தொடர்வது இவை இரண்டைத் தவிர வேறு யாதுமிலவாம். ஆகையால் நாம் வாழும் இச் சொற்ப காலத்தில் எல்லோருக்கும் நன்மையைச் செய்து அதனுல் பெரும் புண்ணியம் பெறுவது மிகவும் ஆநந்த மானது.

கடைசியாகச் சமூக ஊழியத்தின் பெருமையைச் சற்று சுருக்கிக் கூறி நமது வியாசத்தை முடிப்போம்.

ஒருவர்க்கு மெய்ப் பாக்கியத்துக்கு மூலம் இதுவே. பிறரை பாக்கியராக்கும்படி உழைத்து வருகிறவன், முதலாவது தானே பாக்கிய வானுவான். சகலரையும் தன் சகோதரர் எனப்பாவித்து, நேசித்து, சகலருக்கும் சகாயம் புரிந்து வருகிறவன் எவனே அவனே சித்தி யுள்ள ஜீவியம் செய்கிறவன். பிறர் நயத்தை நாடி அவர்களுக் கென்று தனக்குரியவரங்களையும் தன்னையும் பூரணமாய்த் தத்தம் பண்ணுகிறவனே, அவ்வரங்களைப் பாது காக்கிறவனுகவும், விர்த்தி பண்ணுகிறவனுகவும், தானே வளர்து பரிபூரண மடைகிற வனுகவு மிருப்பான்.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! சமூகஊழியத்தின் பெருமையைச் சற்றே கவனித்து, அதனை விருத்தி செய்யத் தக்க சாதனங்களைத் தேடுவீர்களென்றும், பலபல சங்கங்களை ஏற்படுத்தி நமது தாய் நாட்டுக்கு அளவிறந்த உதவியைச் செய்து பெரும் புகழ் பெறுவீர்களென்றும் சர்வ பரிபூரண சச்சிதானந்தப் பரம் பொருளை மனதாரத் துதிக்கின்றேன்.

சுபம். சுபம். சுபம்.

லோ. நாகலிங்கம்,
உடுமலைப்பேட்டை.

பூர்வீக இந்தியாவில் இரண வைத்தியம்

(395-ம் பக்கத் தொடர்ச்சி.)

முக்கியமான அங்கச் சேத சிகிச்சை வேலைகளை அததற்குத் தக்கப்படி வேறு வஸ்துக்களின் மேல் செய்து பழகும்படி கற்பிக்கப் பட்ட பின்பே மானிட சரீரத்தில் செய்யத் தொடங்கும் வழக்கத்தை யனுசரித்து வந்தார்கள். சாதாரணமாய்க் கத்தியை யுபயோகிக்கச் சக்கரைக் கொம்மட்டி, கலியாண பூசுணைப் பழம் முதலிய இவற்றை யறுத்துப் பழகல், துவாரமிடும் வேலை மூத்திரப்பை, அல்லது ஜலம் மண் அல்லது களிமண் நிறப்பப்பட்ட தோற்பைகளில் செய்து பழகல்; சீவுதல் முதலியவை உரோம முள்ள சர்மத்தின் மேலும், இரத்தம் குத்திவாங்குதல் இறந்து போன ஜந்துகளின் இரத்தக் குழலில் அல்லது அல்லித்தண்டிலும், சலாகை விட்டுச் சோதித்தல் பூச்சடித்த கட்டை, மூங்கில், நாணல் அல்லது, உலர்ந்த சுரைக்காய், முதலியவைகளிலும், சிலந்தி, விப்புருதிக் கட்டி இவற்றை யறுத்தல் மரத்துண்டின் மேல் ஒட்டி வைத்த மெழுகுருண்டையிலும், பல் பிடுங்குதல் இறந்து போன ஜந்துக்களிலும், காயங்களைத் தைத்தல் மெல்லிய இரண்டு சர்மத் துண்டுகளிலும், காயங்களுக்குக் கட்டு கட்டுதல் மரம் அல்லது களிமண்ணால் செய்யப்பட்ட மனித உருவத்திலும், காரம் வைத்தல் அல்லது இரணமாக்க மருந்து போடுதல் மாமிசத் துண்டின் மேலும், மூத்திராசயத்தி லிருந்து மூத்திரம் எடுத்தல், வஸ்திகத்திலிருந்து (வஸதிகம் அல்லது உபஸ்தாசயம் என்பது, அடி வயிற்றைச் சுற்றி யிருக்கும் எலும்பு. ஒரு வித வட்டம் போன்ற இந்த எலும்பின் மத்தியில்தான் ஆண்குறி அல்லது பெண் குறி இருப்பது) அன்னிய வஸ்துக்களை யெடுத்தல், இத்தகைய வேலைகளை ஜலம் நிறப்பப் பட்ட மூக்கு வைத்த மண் பாத்திரம் அல்லது குடுக்கைகளில் நாணலால் எடுத்தும் பழக வேண்டும்.

ஸுஷ்ருத சம்ஹிதை முதல் பாகத்திற்கு டாக்டர் K. L. ப்ரிஷக்ரத்நா என்பவர் எழுதிய முந்நுரையில் கீழ்க்கண்டபடி கூறப்பட்டிருக்கிறது:—

ஒரு இரண வைத்தியனுக்கு (Surgeon) இருக்க வேண்டிய யோக்கியதைகளும் (Qualifications), முஸ்தீபுகளும் (Equipments) அனுபவத்தில் இக்காலத்தில் கூறப்பட்டிருப்பவை போன்றே இருக்கின்றன.

இரணவயித்தியத்தில் சஸ்திரப் பிரயோகம் செய்யுமுன் நோயாளிக்கு இலகுவான ஆகாரம் கொடுக்கவேண்டு மென்றும், ஆனால் அடிவயிறு, வாய் இவற்றில் செய்ய வேண்டியதாயின் நோயாளிக்கு ஆகாரம் இல்லாமலிருக்கும் போதே செய்ய வேண்டுமென்றும் விதித்திருக்கிறது. நோயாளியின் அறையில் வெண்கடுகு, மைஸாக்ஷி, சூடன் முதலியவைகளைப் புகை போட வேண்டுமென்று ஸுஷ்ருதர் விதித்திருக்கிறார். அது இக்காலத்தில் விஷப்பூச்சியால் கெடுதி நேராவண்ணம் செய்யும் ஏற்பாட்டிற்கு பதிலாக விருக்கிறது. பூர்வீகத்திலிருந்த இந்திய வைத்தியர்களுக்கு மூலிகைகளைப் பற்றி அபாரமான ஞான மிருந்தது. இக்காலத்தில் சஸ்திரப்பிரயோகம் செய்தே சொஸ்தப்படுத்தவேண்டும் என்று கருதப்படும் வியாதிகளை அவர்கள் உள்ளுக்கு ஔஷதம் கொடுத்தே சுகப்படுத்தி வந்தார்கள். சஸ்திரப்பிரயோகம் செய்தல் அங்கத்தைத் துண்டித்தலேயன்றி வைத்தியம் செய்வதாகாது என்று தாந்திரீகத்தில் (Tantram) கூறப்பட்டிருக்கிறது. வியாதி யுற்ற பாகத்தில் உள்ள ஜீவசத்தி, தானே சுகத்தையுண்டாக்கிக் கொள்ளப் போதுமான வல்லமை யுடையதா யில்லாவிட்டால், அப்போது மட்டுமே வைத்தியன் தன் கத்தியை யுபயோகிப்பது நியாயமாகும். இந்திய வைத்தியர்களின் இந்தச் சமத்காரமான உபாயங்கள் மேல் நாட்டார்களாகிய நம்மவர்க்குத் தெரியவந்தபோது ஐரோபாவிலிருந்த, சஸ்திரப் பிரயோகத்தால் அவயவங்களை யொழுங்கு படுத்தும் முறைமை அடியோடு புதுவழியில் திரும்பி விட்டது. உயிர்ச் சத்துள்ள சர்மத்துண்டை ஒரு பாகத்திலிருந் தறுத்தெடுத்து இன்னொரு பாகத்தில் பொருத்தி வைப்பது அடியோடு இந்தியர் கையாடிவந்த மார்க்கமேயாகும். (ஸுஷ்ருத சூத்திரஸ்தானம் 16.வது அத்தியாயம்.) அறுக்கப்பட்ட காதின் அடிப்பாகத்திற்கு கழுத்து அல்லது அதன் பக்கத்தில் உள்ள சிறு துண்டு சர்மத்தையெடுத் தொட்டவைத்துச் சரிப்படுத்திக்காட்டி அத்தகைய சிகிச்சை கூடும் என்று நிரூபித்தவர் ஸுஷ்ருதரே. பூர்விக கிரீக் இஜிப்ட் இரணவைத்தியர்களுக்குத் தெரியாமலிருந்த கண்ணில் பூவெடுக்கும் வித்தையைக் கண்டு பிடித்த கௌரவம் ஸுஷ்ருதருடையதே.

போஜ மகாராஜன் காலத்தில் நடந்த விஷயங்களைப்பற்றி பல்லால பண்டிதரால் எழுதப்பட்ட போஜப்பிரபந்தம் என்ற நூல் ஒன்றிருக்கிறது. அதில் சிரசில் பொறுக்கமுடியாத ஒருவித நோயால் வருந்திக் கொண்டிருந்த அரசனுக்குச் செய்யப்பட்ட ஆச்சரியமான சஸ்திரப்பிரயோக சிகிச்சையைப்பற்றி விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. அக்காலத்திலிருந்த வைத்தியர்களெல்லாம் பார்த்தும் அரசனுடைய நோய் நீங்காமல் கடைசியில் மிக்க கஷ்டமான நிலைமைக்கு வந்துவிட்டது. அச்சமயம் தெய்வசங்கல்பமாகச் சகோதரர்களாகிய இரண்டு வைத்தியர்கள் அங்கு வந்து சேர அவர்கள் அரசனைப் பார்க்கும்படி யழைக்கப்பட்டார்கள். அவர்கள் அரசனைச் சோதனை செய்து சஸ்திரப் பிரயோகம் செய்தாலன்றி வியாதி தீராதென்று கூறிவிட்டார்கள். பிறகு அவ்வாறே செய்வதற்காக அரசன் ஸ்மரணையின்றி யிருக்க ஸம்மோகினி என்ற மூலிகையை யுபயோகித்து, அரசனுக்கு அடியோடு ஸ்மரணை நீங்கியிருக்கும் சமயம் கபால ஓட்டையெடுத்து மூளையில் வியாதிக்கு இருப்பிடமாகக் கெட்டிருக்கும் பாகத்தையெடுத்து விட்டு, பிறகு ஓட்டைமூடி மேல்சர்மத்தைத் தைத்து இரணத்தை

ஆற்றத்தக்க ஔஷதம் போட்டு விட்டார்கள். அதன் பிறகு ஸஞ்சீவினி என்ற மூலிகையால் அரசனுக்கு ஸ்மரணை யுண்டாகச்செய்ய, அரசன் விழித்தெழுந்து நோய் தீர்ந்து சுகமடைந்தான்.

கொண்டால் நாட்டுத் தாகூர் ஸாஹிப் எழுதிய ஆரியவைத்திய சாத்திர சரித்திரத்தில் கூறிய இச்சம்பவத்தால், புத்தரிடமிருந்த வைத்தியரும் இவ்வாறே சஸ்திரப்பிரயோகத்தால் வியாதிகளுக்கு மிக்க ஜெயத்தோடு சிகிச்சை செய்து வந்ததாகத் தெரிகிறது. அடி வயிற்றை யறுத்து ஜெயத்தோடு சிகிச்சை செய்யும் சம்பவங்களும் பலவுள. இவ்வாற்றால், இக்காலத்தில் மிக்க அருமையும் பிரமாதமுமானவைக ளென்று கருதப்பட்ட சஸ்திரப் பிரயோக சிகிச்சைகளெல்லாம் பூர்விக இந்தியர்கள் அறிந்தேயிருந்தார்களென்றும், ஜயத்தோடு அவைகளை யனுபவமாகச் செய்து வந்தார்களென்றும் தெரிகிறது. குளோரபாரத்திற்குப்பதில், உன்னததசையிலிருந்த அந்த நாட்களில், ஸம்மோகினி என்ற மூலிகை யுபயோகிக்கப்பட்டு வந்தது. ஆனால் சஞ்சீவினி என்ற மூலிகைக்குச் சமானமான ஒரு மூலிகை இக்கால மூலிகை சாத்திரங்களில் காணப்படவில்லை. அது இக்காலத்தில் சில சமயங்களில் முறிப்பு மருந்துகளால் மரணம் நேரிடுவதற்குள்ள சந்தர்ப்பங்களை உண்மையாகவே குறைத்து விடும்.

சேரிட மறிந்துசேர்.

இவ்வுலகிலே இரண்டற்ற ஒன்றில்லை யென்பது கற்றறிந்தோர்களது வாதம். ஓரிடத்தில் புண்ணியமிருப்பின் பாபம் மற்றோரிடத்தேயிருக்கும். இம்மாதிரியே தர்மமிருப்பின் அதர்மம் இருப்பதும், நன்மையிருப்பின் தீமையிருப்பதும் சகஜமே. இவ்விதமாக நம் வியாசத்தின் தலைப்பிற் கிணங்க சேரக்கூடிய இடம் ஒன்றிருந்தால் சேரக்கூடாத இடம் இருத்தல் வேண்டும். ஆதலால் எது சேரிடம் எது சேரத்தகாத இடம் என்பதை அறிந்து, சேரிடமாகிய நற்குணவான்களிடம் நெருங்கி, பழகி, ஒழுகி உய்வோமாக.

மானிட வாழ்க்கையானது துன்பமும், இடுக்கண்களுமின்றி நிறைவேற வேண்டுமாயின்; நாம் சேர்க்கை வாசனையைப்பற்றி மிக்க அக்கறை பாராட்டவேண்டுவது அத்தியாவசியமாகும். இதைச் சுட்டியே நம்முது நூல்கள் அரிய மேற்கோள்களுடன் முறையிடுகின்றன. மேல் நாட்டுச் சாஸ்திரிகளில் ஒருவரான ஜேம்ஸ் கார்பீல்டு என்பவரும் 'ஒருவனுடைய குணமென்பது அவன் சுபாவமும், பழக்கமும் சேர்ந்துண்டானது' என்று கூறியுள்ளார். ஆய்ந்தோய்ந்து பார்த்துச் சேர்க்கை வாசனை யடைதல் வேண்டுமென்பதை யுன்னியே நம் ஔவை மூதாட்டியாரும், 'இணக்க மறிந் திணங்கு' 'சேரிட மறிந்துசேர்' என்று இரண்டு விலையற்ற சொற்சுவைத் துண்டுகளை உலகத்தவர்களுக்கு அன்புடன் அருளியிருக்கின்றனர். இப்பழமொழியைப் பின்பற்றி ஒழுகுதலே சாலச் சிறப்புடைத்தாகும்.

சன்மார்க்கன் துர்ச்சேர்க்கையால் அதமனாதலும், துன்மார்க்கன் நற்சகவாசத்தால் தூய்மையுடையோனாதலும் அனுபவவிளக்கமாகும். ஆகை

யால் நாம் தீத்திரத்தாரைவிட்டு விலகி, மாண்புடைக் குணத்தினரின் நட்புப்பூண்டு வாழ்தலே இன்றியமையாத சாதகமாகும்.

இனித் தீயோர் யாரென்பதையும் நல்லோர் யாரென்பதையும் பற்றி அனுபவத்தோடு நம்முதியோரின் திருமொழிகளையும் சேர்த்து ஆராய்வோமாக:—

(1) நல்லோரின் நட்புடைத்தாயிருந்தால் அவர்கள் தம் குறைகளைப் பாராட்டாது நம் நன்மையையே நாடுவர். (2) நல்லோர்க்குக் கருணையுண்டு. அவர்களிடம் பிறர் குற்றஞ் செய்யினும் அக்கருணையால் அவர் மனமிளகக்கூடும். தீயோர்க்குக் கருணை கிடையாது. நன்மை செய்யினும் அவர் தீமையாக நினைப்பர். (3) மேலோர் கடுஞ்சொல் இன்பமும், கீழோர் இன்சொல் துன்பமும் கொடுக்கும். (4) நல்லோர் கோபத்திலுங் கொடுப்பர். தீயோர் மகிழ்ச்சியிலுங் கொடார். (5) மேலோர் பிறர் குணத்தையே கூறுவர். கீழோர் பிறர் குற்றத்தைக் கூறுவர். (6) பழிக்குப் பயப்படுவர் மேன்மக்கள். அதற்கெதிர் நிற்பர் கீழ்மக்கள். (7) நல்லார் நட்பு அகத்தினினின்றெழுந்து நாளுக்கு நாள் ஓங்கி வளரும். தீயார் நட்பு முகத்தினினின்றெழுந்து திடீரென்று வளர்ந்து உடனே வீழ்ந்துவிடும்.

பிரிய சகோதரர்களே! மேற் சொல்லப்பட்ட குறிப்புக்களை மனத்திற்றூங்கி, சேர்க்கையாள்ரை ஆராய்ந்து அவர்களை அணுகித் தோழமைபூண்டு அவர்களின் இன்பத்திற்கும் துன்பத்திற்கும், வாழ்விற்கும் தாழ்விற்கும் பங்காளி (பாகஸ்தர்) யராகி நடத்தலே நம் முக்கிய கடமையும் மேம்பாடுமாகும். இதை நோக்கிய நம் பெரியோர்களும் 'சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை' என்று கூறியுள்ளனர். இதையே ஆங்கிலத்திலும் 'Union is strength' என்று கூறப்பட்டிருக்கிறது.

ஆகையால் நேயர்களே! நாம் யாவரும் 'நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்', 'துஷ்ட சேர்க்கை துன்பத்தின் வழிகாட்டி' என்பவற்றை நெஞ்சத்திற்கொண்டு, துஷ்டரைக்கண்டால் தூரவிலகி நம் வாழ் நாளை வளம்பெறச் செய்து உய்வோமாக. இதுவே நம்மையும் நம் பெரியோர்களையும் கனம் பண்ணுவதும் நம் தாய் நாட்டைச் செழுமையுறச் செய்வதும் அதனை நமக்கு அன்புடன் அருளிய எல்லாம் வல்லவனும், இரண்டற்றவனுமான முழுமுதற் கடவுளைக் களிப்பூட்டுவதுமாகும்.

P. P. S. நாச்சிமுத்து, திண்டுக்கல்.

சில விபரீதங்களை ஒழிக்கும் முறை

கோடிக்கணக்கான மானிடர்கள் மாண்டபின் நமது கடமையைச் சரிவரச் செய்ய முன் வராவிடில் நாம் புத்தியில்லா மூர்க்கர்களாவோம். கழிந்த காலத்தின் சம்பவங்களை நன்கு பரிசீலனை செய்த பின்பு வருங் காலத்தைச்சீர்திருத்தம் பண்ணுவதே மானிட தர்மம். ராஜீய விஷயத்தில் கக்ஷிபேதம் பாராட்டாத ஒரு மனிதன் பிற்கால விபரீத சம்பவங்களில் மாத்திரம் தன் முயற்சியை வீணகச் செலவழியான்.

மேனாட்டு நாகரீகமோவெனின் சில ஜீவாதாரமான விஷயங்களில் பிற்போக்காகவே யிருப்பதாய் மேனாட்டார் பலர் வரைந் துள்ளார்கள். திக்குத்திசை யன்னியில் இந்நாகரீகம் எங்கே கொண்டுபோய் விடுமோ என்று அவர்களுக்கே நன்கு புலப்படவில்லை. இம்மஹாயுத்தத்தில் மேனாட்டு நாகரீகத்தின் அடிப்படையான தத்துவங்களே ஆடிப்போய் விட்டன; இன்னும் சாசுவத சமாதானக் கோட்பாடுகள் தீர்ந்தபா டில்லையென்றே லார்ட் ப்ரைஸ் (Lord Bryce) துயருறுகின்றார். இதுவுமன்னியில் கலகாஸ்பதமான சில நவீன விஷயங்களும் இச்சமாதானத்தில் முன்வந் திருக்கின்றன.

இப்படிக்குள்ள நாகரீக முறையைக் குரங்கைப்போல் பின் பற்றிப் போவது நமது மதத்திற்கும், நமது இலக்ஷியங்களுக்கும் அபாயகரமானது. நம் ராஜீய விஷயத்திலும் மேனாட்டிலுள்ள விபரீதங்கள் இங்குவருமுன் காப்பதே நலம். கக்ஷி பேதங்கள் நம் நாட்டில் வேரூன்றி விடில், மேனாடுகளிலுள்ள (Rings, Bosses) விசித்திரமான பேரமைந்த தாருபேசும் ராஜீய புரோக்கர்களை முன்னமே கண்டனம் செய்வதற்கு சட்டபூர்வமாயும், பிரசார வேலையினாலும், உபாயங்கள் நாம் தேடவேண்டிய தவசியம்.

கக்ஷிபேதத்தின் வலையில் சிக்கி உண்மையில் தேச பக்தர்களாயிருக்கும் பெரியோர்களை நிந்திக்காமலிருக்க முயலவேண்டும். ராஜீய விஷயத்தில் மாத்திரமல்ல, மற்றெல்லா விஷயங்களிலும் சரி, வல்லமையும் ஒற்றுமையுமே நமது இலக்ஷியங்களை நிறைவேற்றி வைக்கும். ஒரு கக்ஷியை நாம் தகுந்த காரணங்களால் கண்டிப்பின், நமது கக்ஷி இனிச் செய்யவேண்டிய முறையைப்பற்றி ஆயத்தமாயிருக்கவேண்டும். அதாவது கண்டிப்பதோடு நின்றுவிட லாகாது. ராஜீய முறைகளைத் தக்க முகாந்திரம் சொல்லிக் கண்டிப்பதற்காகவே மனிதர்களைக் கண்டிக்கவேண்டுமே யல்லாது, இதரகாரணங்கொண்டு வைஷம்யத்தை ராஜீய வாதத்தில் கொண்டு வருவது மனிகுணமன்று. "எல்லோருக்கும் சுயராஜ்யம், என்ற கூக்குரல் மாத்திரம் மனிதனைச் சுவர்க்கத்தில் கொண்டுபோய்ச் சேர்க்காது. மனிதனது சுயசக்தியின் சட்டசம்மதமான நிரூபணமே நாம் சுவ சுதந்தரியத்தைப் பெறற்கு வேண்டிய மார்க்கம்.

கானடா (Canada) தேசத்திலிருந்து நம் போலிய தேசாபிமானிகள் ஒரு விஷயம் அறியவேண்டி யிருக்கிறது. கானடா தேச ஜனங்கள் எதற்காகப் பட்டமளிக்கிற அமுல் இராஜாங்கத்தாரிடமிருக்க வேண்டுமென்று வினவுகிறார்கள். கண் மூடித் திறப்பதற்குமுன் என் சில தேச பக்தர்கள் ஜனங்களின் அன்பை இழக்கவேண்டும்?

ஆகவே, நமது இராச்சியத்தில் "இப்பட்டம்வஹிக்கும் பூச்சிகள்" (Titled non-entities) இனி வேண்டாமென்று நாம் தீர்மானித்தால் உபய கக்ஷிகளுடைய திரவியங்களும் (Party-funds) அனுவசியமாய்ச் செலவழியாதென்பது நிச்சயம்.

இதுநிற்க, தொழிலபிவிருத்தி விஷயங்களிலும் ஒவ்வொரு நாளும் வேலை நிறுத்தங்கள் என்ற செய்தியே எட்டுகிறது. முற்போக்கான முதலாளிகளும், இவ்வேலை நிறுத்தம் செய்யு முன் அதினால் விளையக்கூடிய

பொருள் சேதத்தையும் சம்பள நஷ்டத்தையும் நன்கு உணர்வார்கள். வெகு வருஷங்களுக்கு முன்னமேயே சில நிபுணர்களும் அநேக தேசாபிமானிகளும் இம்மேனாட்டு இயந்திரத் தொழிற் சாலைகள் (Modern Industrialism) உண்மையில் இந்தியாவுக்கு நலம்தரா என்று கூறியுள்ளார்கள். நமது பூர்வீக கிராம கைத்தொழில்கள் அபிவிருத்திக்கு வரவேண்டிய தவசியம். பல்லாயிரம் இயந்திரங்கள் இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படினும், நம்கைத்தொழிலை அறவே ஒழிக்கமுடியாது. இவ்விஷயம் மேனாட்டு நிபுணர்களுக்கும் தெரியும். நமதுகைத்தொழிலபிவிருத்திக்குச்சுவாதந்தரிய முள்ள புராதனத் தொழிற் சங்கங்களை (Trade fields) முன்னுக்குக் கொண்டுவர வேண்டியது நமது கடமை. இக்காலத்திலோ எல்லாத் தொழிற் கல்வி ரிபோர்டுகளும் இச்சங்கங்கள் சீர் குலைந்துபோய் விட்டனவென்பதையே முறை யிடுகின்றன; மற்றும் நமது காருண்ய கவர்ன்மெண்டார் நவீன சங்கங்கள் தங்கள் ஆதரவில் ஏற்படுத்தலாம் என்கிறார்கள். இது பிசகு; ஏனெனின் இச்சங்கங்களுக்கு புராதனமாயுள்ள சுவாதந்தரியம் கொடுத்து, அவர்கள் பஞ்சாயத்தை கவர்ன்மெண்டார் நன்கு மதித்து ஒவ்வொரு தொழிற் சங்கத்தின் அனுமதியின் பேரில்தான் அந்தந்த தொழில் விஷயமாய்ச் சட்டமியற்றப் படுமென்று சட்ட பூர்வமாய் உறுதி கொடுத்தாற்றான் இச்சங்கங்கள் உண்மையில் முன்னேற்றமடையும்.

தொழிலாளிகளின் மானிட அந்தஸ்திற்குத் தகுந்தவாறு முதலாளிகள் நடந்து கொள்ளாவிடில் இவ்வேலை நிறுத்தங்கள் ஒழியா. தொழிலாளிகளுக்கு வேண்டிய அன்ன வஸ்திரங்களிலும், அவர்கள் சந்ததிகள் கல்வி கற்கவேண்டிய ஏற்பாடுகளிலும், சுகாதாரமான வீடுகள் அமைப்பதிலும், முதலாளிகள் சிரமம் எடுக்க எடுக்க, தொழிலாளிகளும் சந்தோஷமாகவே எஜமானனிடத்தில் வேலை செய்வார்கள். இது மனித சுபாவமே. ஆனால் கவர்ன்மெண்டார் தொழிற் சச்சரவுகளெல்லா வற்றிலும் புகுவதென்றால் சாத்தியமல்ல. இங்கு அர்த்த சாத்திர வரட்டு போதகாசிரியர்கள் கூறுவது உண்மையே. உதாரணமாக ஆஸ்திரேலியாவைப் போல் எந்த கவர்ன்மெண்டும் சட்ட பூர்வமாய்க் குறைந்த சம்பளம் (Mininum Wage) விதிக்கலாகும்; ஆனால் அதே கவர்ன்மெண்டார் இச்சட்டத்திற்கு முன்பாக இதற்கும் குறைந்த சம்பளத்தில் வேலை செய்தவர்களை வேலையி லமர்த்தச் சட்ட பூர்வமாய் முடியாது. ஏனெனின் இவ்விஷயம் அந்தந்த முதலாளிகளாலேயே தீர்த்துக் கொள்ள வேண்டியது. எந்த முதலாளியும் பயிற்சி குறையுள்ள (Inefficient) வேலைக்காரர்களை அதிகச் சம்பளத்தில் அமர்த்தான் என்பது வெளிப் படை.

மேலும் எந்தத் தொழிலும் கடவுள் முன்னிலையில் நடை பெறுகிறது என்ற தத்துவம் நன்றாய் உணரப் பட்டதாக விளங்கவில்லை. இவ்வுலகமோ பல நூற்றாண்டுகளாகப் பணம் சேகரிப்பதிலேயேமுயற்சியைப் பெருக்க விட்டு, எல்லாம் வல்ல இறைவன்ஒருவர் உளர் என்ற உண்மையையே மறந்து விட்டது போலும். கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போல், எண்ணிறந்த மானிடர்கள் அநியாயமாய் மாண்டபின் தான் மதவிஷயத்தில் மேனாட்டிலுள்ள பெரும் பாலோர்க்கு நம்பிக்கை வருவதாகப் புலப்படுகிறது. நம் தேசத்திலோ அவ்வளவு சீர்கேடு வந்த

தாகத் தெரிய வில்லை. இதற்குக் காரணம் நமது சரித்திர பூர்வமாய் எல்லோருக்கும் விளங்கும். எக்காலத்திலும் நாம் இறைவன் விஷயம் ஒன்றே சாசுவதம் என்று திரிகரண சுத்தியாய் நம்பியவர்கள்; ஆகவே இறைவன் ஆதி சிருட்டிகாலத்தில், வல்லோனென்றும், எளியோனென்றும், முதலாளியென்றும், தொழிலாளியென்றும் சிருட்டிக்க வில்லை என்ற தத்துவத்தை உணர்ந்தாலன்றி சாசுவதமான சமாதானம் உலகில் நிலையாது. இதை மறந்தால் ஆயிரம் வில்ஸன்கள் (Wilsons) இருந்தாலும் சமாதானம் வராது.

நமது புராதன நாகரீகத்தை நன்குணர்ந்தபின், மேனாட்டு நடையுடைபாவனைகளை மதியீனமாய் நாம் பின்பற்றினால், அதினால் விளையும் தீமையை வரையறுக்க முடியாது. நாளடைவில் தொழிற்சாலைகளில் நம் ஸ்திரீகள் கும்பல் கும்பலாய்ப் போய் வேலை செய்தல், வேலை கிடையாத ஸ்திரீகளும் வேலை செய்ய முடியாத ஸ்திரீகளும், இப்படி வெளியே சென்று வேலை செய்வதால் நம் ஸ்திரீகளின் உண்மையான பலம் ஹானி யடைவது, பெற்றோர்களிருவரும் வெளியில் வேலைக்குப் போவதால் அவர்கள் சந்ததிகளின் மேல்பார்வை குறைவது, கவர்ன்மெண்டார் விவாகமாகாத ஸ்திரீகள் விஷயத்திலும் விதவைகள் சம்பந்தமாயும் சட்டம் செய்யவேண்டிய அபாயம்—ஆகிய இன்னும் பலவிதமான அன்னிய நாட்டு அசப்யங்களை நம் தேசத்தில் கொண்டுவருவதற்கு நாமே கல் நாட்டினால், இறுதியில் அநியாயமாய் வருந்தி, நம்புராதன நாகரீகத்தை யிழந்து அழிவோம் என்பதில் ஐயமேயில்லை.

ஆதலால், ஒவ்வொரு தேசாபிமானியும், எக்கக்ஷியினராயினுஞ் சரி, எம்மதத்தின ராயினுஞ்சரி, மேற்கூறிய விபரீதங்களை ஒழிக்க முயலவேண்டும். அன்னிய நாட்டில் நடந்திருக்கிற குழப்பங்களிலிருந்து நாம் தப்பவேணுமாயின், அவர்களது வழியில் படிப்படியாய் நடப்பது, படுகுழிக்குப்போகும்வழியே யல்லாது, உண்மையாய் முன்னேற்ற மடைந்து, நமது புராதன ஸ்தானமாகிய லோககுருவின் பீடத்திற்குப் போகும் மார்க்க மாகாதென்பது நிச்சயம்.

க. ரா. இராமபத்திரன்.

குறிப்பு:—நண்பர்களே! இவ்வியாசத்திலடங்கி யுள்ள விஷயங்களின் அருமை அறிவாளிகளுக்கு நன்கு புலப்படும். இதை யனுப்பிய நமது நண்பராகிய ம-ா-ா-ஸ்ரீ, க. ரா. இராமபத்திரன். பி. ஏ. (கௌரவம்) அவர்கட்கு நாமனைவரும் மிக்க நன்றி பாராட்டக் கடமைப் பட்டவர்களாகிறோம். நேயர்கள் இத்தகைய வியாசங்களைப் பன்முறை வாசித்து இதிலுள்ள விஷயங்களை நன்குணர்ந்து, அதன்படி யொழுகி நம்தாய் நாட்டிற்கு க்ஷேமத்தை யுண்டாக்குவதே நாம் பத்திரிகை வாசிப்பதா லடையவேண்டிய பயனும், இதையெழுதியோர்க்குச் செய்யும் நன்றியும், பொருட் செலவைக் கவனியாது தாய் நாட்டின் க்ஷேமத்தைக் கருதி பத்திரிகைகளை நடத்தும் பத்திராதிபர்களுக் களிக்கும் கைம்மாறு மாகும். இந்த வியாசத்தில் "கண்மூடித் தனமாய் நாம் மேல் நாட்டு நாகரீகங்களைப் பின்பற்றுதலை யறவே யொழிக்க வேண்டும்" என்ற விஷயத்தை யாவரும் நன்கு கவனிக்கக் கோருகிறோம்.

பத்திரிகாசிரியர்.

கைவல்ய நவநீத வசனம்

(336-பக்கத் தொடர்ச்சி)

(மேலே கூறியபடி தொம்பதத்தின் இலட்தியார்த்தமான நீ என்பது சாக்ஷியாகிய கூடஸ்தன் என்று சீடனுக்கு விளங்கும்படி கூறிய ஆசான், அதன் பிறகு தொம்பதம் தத்பதம் இரண்டும் ஐக்கியமாக வேண்டியதைப் பற்றிக் கூறுகிறார்.)

குரு:—சற்சீடனே! நாம் மேலே கூறியபடி ஸ்தூலம், சூக்குமம், காரணம் என்ற மூன்று தேகங்களுக்கும் அன்னியனுகவும், சாக்கிர சொப்பன சுழுத்தியாகிய மூன்றவத்தை களுக்கும் சாக்ஷிமாத்திர மாகவும், பஞ்சகோசங்களிலிருந்தும் விடுபட்டவனுகவும் உள்ள கூடஸ்தனுகிய நீயே துவம் பதத்தின் இலட்சியார்த்தம். எப்போதும் பந்தம் என்பதே யில்லாத பிரம்மமே தத் பதத்தின் இலட்சியார்த்தம். சீவன், ஈசுவரன் இவர்களே முறையே துவம்பத தத் பதங்களின் வாச்சியார்த்தம். வாச்சியார்த்த மாகிய சீவன், ஈசுவரன் இவர்கள் ஒருவர்க்கொருவர் பேதப்பட்டிருப்பவர்க ளாதலால், இவர்களுக்குள் அபேதமாகிய ஐக்கியம் ஒரு போதும் சித்திக்காது. இலட்சியார்த்த மாகிய கூடஸ்தன், பிரம்மம் என்ற இவர்கள் பேதமின்றி ஒரே யினமானவர்களாதலால் இவர்களுக்குள்ளேயே ஐக்கியம்கூடும்.

சீடன்:—சுவாமிகளே! சீவ ஈசுவரர்களுக்குள் பேதம் உண்டென்பது எவ்விதமோ தயை கூர்ந்து விளக்கியருளல் வேண்டும்.

குரு:—குழந்தாய்! இவர்களுக்குள் பேதம் எவ்வாறுண்டெனின் கூறுதும் கேட்டி. சீவன் ஈசுவரன் என்று இவர்கள் பெயரில் பேதம் உண்டு. சீவன் பிண்டத்திலும், ஈசுவரன் அண்டத்திலுமுளதால் இடத்திலும் பேத முண்டு. சீவன் காரிய உபாதி, ஈசுவரன் காரண உபாதி ஆதலின் உபாதி பேதமுண்டு. உபாதி என்றுல் ஒன்றின் சுய ரூபத்தைக் காண வொட்டாது அதைப் பல விதமாகத் தோற்று விப்பது. சீவன் வியட்டி தேகமுடையவன், ஈசுவரன் சமட்டி தேக முடையவன் ஆதலின் உடல் பேதமுண்டு. சீவன் கிஞ்சிஞ்ஞன் அதாவது அற்ப ஞானம் உடையவன், ஈசுவரன் சர்வஞ்ஞன் அதாவது அகண்ட ஞான முடையவன். ஆதலின் அறிவு பேதம் உண்டு. இவ்வாறு இவர்களுக்கு எல்லா விஷயங் களிலும் பேதமுண்டு. பாதாளமும் வானுலகும் போல் இவர்கள் மிக்க தூரம் அகன்று நிற்பவர்கள். ஆதலால் இந்தச் சீவ ஈசுவரர்களுக்குள் ஒரு போதும் ஐக்கியம் உண்டாகாது.

மகா வாக்கியம்.

மகாவாக்கியம் என்பதற்கு சித்தார்த்த போதக வாக்கியம் என்றும் மொழிவர். அதாவது பிரம்மான்ம ஐக்கியப் பொருளைமட்டும் போதிக்கும் வாக்கியமாம். இந்த வாக்கியம் நான்கு வகைப்படும். 1. பிரக்ஞானம் பிரம்மம், 2. அகம் பிரம்மாஸ்மி, 3, தத்துவமசி, 4. அயமான்மா பிரம்மம் என்ற இந்த நான்கு வாக்கியங்களும் நான்கு வேதங்களிலுமிருந் துண்டாயின. எங்ஙனம் எனின்:—

(1) இருக்கு வேதத்தைச் சார்ந்த ஐத்ரேயம் என்ற உபநிடதத்திலுள்ளது "பிரக்ஞானம் பிரம்மம்" என்ற மகாவாக்கியம். "ஞான வடிவமாக விருப்பதே பிரம்மம்" என்பது இதன்பொருளாம்.

(2) யஜுர் வேதத்தைச் சேர்ந்த ப்ரகதாரண்ய உபநிடதத்திலுள்ளது "அகம்பிரம்மாஸ்மி" என்ற மகாவாக்கியம். "உள்ளமே பிரம்மமாகவிருக்கிறது" என்பது இதன் பொருளாம்.

(3) சாம வேதத்தைச் சேர்ந்த சாந்தோக்கிய உபநிடதத்திலுள்ளது. "தத்துவமஸி" என்ற மகா வாக்கியம். "அது நீயாயிருக்கிறாய்" என்பது இதன் பொருள்.

(4) அதர்வண வேதத்தைச் சேர்ந்த மாண்டூக்ய உபநிடதத்திலுள்ளது "அயம் ஆன்மா பிரம்மம்" என்ற மகா வாக்கியம். "இந்த ஆன்மா பிரம்மம்" என்பது இதன் பொருள்.

"முந்தியவே தோற்பத்தி பிரக்ஞானம்
பிரம்மமென மொழியும் வாக்கியஞ்
சிந்தை செய்யு மிரண்டிலகம்
பிரஹ்மாஸ்மி யெனும்வாக்கியம் செப்புமூன்றில்
தத்தொமசி யெனும் வாக்கிய
நாலாவ தயமான்மா பிரஹ்மமென்ன
வந்தவிந்த வாக்கியந்தா னதர்வணத்தி
லுற்பத்தி வகுத்த வாறே"
(மகாவாக்கிய உபதேசம்.)

இந்த நான்கு மகா வாக்கியங்களில் "பிரக்ஞானம் பிரம்மம்" என்ற முதல் மகாவாக்கியம் மனனத்தியான அப்பியாச வாக்கியம் என்றும், இரண்டாவதான "அகம் பிரம்மாஸ்மி" என்ற வாக்கியம் அநுபூதி, அதாவது ஸமாதியனுபவ வாக்கியம் என்றும், மூன்றாவதான "தத்துவமஸி" என்ற வாக்கியம் உபதேச வாக்கியம் என்றும், நான்காவதான "அயமாத்மா பிரம்மம்" என்ற வாக்கியம் நிதித்தியாசன வாக்கிய மென்றும் கூறப்பட்டிருக்கிறது.

"சுயமதுவாந் தத்வமசி யென்னும் வாக்யம்
சொல்லுமுப தேசமகா வாக்ய மாகு
மியலுமகம் பிரம்மாஸ்மி யென்னும் வாக்ய
மிலகுமநு பூதிமகா வாக்ய மாகு
மயன்மருவாப் பிரஞ்ஞானம் பிரம வாக்யம்
மனனத்தி னப்பியாச வாக்ய மாகும்
அயமான்மாப் பிரமமென வறையும் வாக்ய
மதற்கெல்லாஞ் சம்மதமாம் வாக்யந் தானே" (ரிபுகீதை).

இந்த நான்கு வாக்கியங் களில் "தத்துவமசி" மகா வாக்கியத்திற்குள்ள ஆன்ம பரமான்ம ஐக்கியமாகிய அபேதார்த்தமே மற்ற மூன்று வாக்கியங்களிலு முள்ளதாதலாலும், இது குரு உபதேசிக்கும் வாக்கிய மாதலாலும் இந்த வாக்கியமே சிறந்ததாகும். ஆதலின் இதுவே ஈண்டு விவகரிக்கப் படுகிறது.

சாம வேதத்தின் சாந்தோக்கிய உபநிடதத்தில் உத்தாலகமுனிவர் தம் புதல்வனான சுவேத கேதுவுக்கு இச்சகத்தைச்சிருட்டிக்கின்ற ஈசுவரனைச் சுட்டிக் காட்டி. "தத்துவமசி" என்றார். தந் என்றால் ஈசுவரன்; துவம் என்றால் நீ; அஸி என்றால் ஆகிறாய்—"நீ அதுவாகிறாய்" என்பது அதன் வாச்சி யார்த்தம். மேற் கண்டபடி சீவனுக்கும் ஈசுவரனுக்கும் பெயர், இடம், உபாதி, உடல், அறிவு ஆகிய இவற்றில் பேதமிருப்பதால் இவை யிரண்டிற்கும் ஐக்கியம் எங்ஙனம் கூடும்? என்று சங்கை யுண்டாகிறது.

இவ்வாறு வாச்சியார்த்தத்தில் அர்த்தம் பொருந்தாமல் விரோதம் உண்டானால், வடநூல் பண்டிதர்கள் அது விரோதமின்றி அர்த்தமாகும் வண்ணம் இலக்ஷணா வாக்கியத்தால் பொருள் கொள்வார்கள். இலட்சணை அல்லது இலட்சணா விர்த்தி என்பது, ஒரு வார்த்தையின் உச்சரிப்பால் தோன்றும் அர்த்தத்தோடு சம்பந்தப்பட்ட வேறொரு அர்த்தத்தை அறியச் செய்யும் சக்தியாகும். இச்சக்தியால், அதாவது இலக்ஷணா விருத்தியால் தோன்றும் அர்த்தம் இலட்சியார்த்தம் எனப்படும். அந்த இலட்சணை (1) ஜஹல்லட்சணை, (2) அஜஹல்லட்சணை, (3) ஜஹதஜஹலட்சணை என்று மூன்றாம். இவற்றிற்கு முறையே விட்ட இலட்சணை, விடாத இலட்சணை, விட்டு விடாத இலட்சணை என்று கூறுவர்.

இவற்றுள்,—

1-வது:—ஜஹல்லட்சணை அல்லது விட்ட இலட்சணை—வாச்சியார்த்தப் பொருளை யடியோடு விட்டு விட்டு, வாச்சியார்த்தத்தின் சம்பந்தியாகிய வேறு பொருளை யுணர்த்துவது ஜஹல்லக்ஷணையாம். ஒன்றோடு சம்பந்தப் பட்டிருக்கும் வஸ்துவிற்குச் சம்பந்தி என்று பெயர்.

(உதாரணம்):—"கங்காயாம் கோஷப் பிரதி வசதி" அல்லது "கங்கையிற் கோஷம்" என்றால் "கங்கையில் கிராமம் இருக்கிறது" என்று பொருள்.

இங்கு கங்கை என்ற பதத்திற்கு வாச்சியார்த்தம் பிரவாகம். பிரவாகத்தில் கிராமத்தின் இருப்பு கூடாது. ஓடும் ஆற்று ஜலத்தில் கிராமம் எவ்வாறிருக்கும்? ஆகையால் அந்தப் பிரவாகம் என்ற வாச்சியார்த்தத்தை யடியோடு விட்டு, வெள்ளத்தோடு சப்பந்தப் பட்டிருக்கும் கரையைப் பொருளாகக் கொள்கிறோம். இவ்வாறு பொருள் கொள்வதே விட்ட இலட்சணையாம்.

2-வது:—அஜஹல்லக்ஷணை, அல்லது விடாத இலட்சணை—வாச்சியார்த்தத்தை விடாமலே அதன் சம்பந்தியாகிய வேறு அர்த்தத்தைக் கிரகிப்பது விடாத இலட்சணையாம்.

(உதாரணம்:—"சோணஸ் திட்டதி, சுவேதோ கச்சதி!' அதாவது சிவப்பு நிற்கின்றது, வெள்ளை யோடுகிறது. அல்லது, "குந்தாப் பிரவசந்தி" அதாவது ஈட்டிகள் செல்கின்றன.

இவற்றில்,

முதல் உதாரணத்தில் சிவப்பு, வெள்ளை என்ற பதங்களின் வாச்சியார்த்தம் செந்நிறம், வெண்ணிறங்களாம். நிறங்கள் நிற்கும் ஓடும் என்பது பொருந்தாத விஷயம். ஆகையால் அந்த வாச்சியார்த்தங்களை விடாமலே அந்த நிறங்களை யுடைய பசுக்கள் அல்லது குதிரைகள் என்று

பொருள் கொள்வதே விடாத இலட்சணையாம். இங்கு வாச்சியார்த்தத்தை விடாதிருந்தால்தான் "சிவப்புப்பசு நிற்கிறது; வெள்ளைப் பசு ஓடுகிறது" என்று பொருள் விளங்கும். ஆகையால் வாச்சியார்த்தத்தை விடாமலே பொருள் கொள்ளவேண்டிய தாயிற்று.

இரண்டாவது உதாரணத்தில் ஈட்டிகள் என்பதன் வாச்சியார்த்தம் ஈட்டிகள் என்ற குத்தாயுதங்கள். உயிரற்ற அவை செல்வது கூடாது. ஆதலால் வாச்சியார்த்தத்தை விடாமலே ஈட்டிகளைப் பிடித்திருக்கும் மனிதர்கள் அதாவது ஈட்டிவீரர் என்று பொருள் கொள்கிறோம். இவ்வாறு கொள்வதே விடாத இலக்கணையாம்.

3-வது:—ஜஹதஜஹலட்சணை அல்லது விட்டுவிடாத இலட்சணை. வாச்சி யார்த்தத்தில் அர்த்தம் செய்து கொள்வதற்கு விரோதமாகத் தோன்றுகிற பாகத்தை விட்டு விட்டு, விரோதமல்லாத மற்ற பாகத்தைப் பொருளாகக் கொள்வது விட்டு விடாத இலக்கணையாம்.

(உதாரணம்,—"ஸோயம் தேவதத்த:" அதாவது "அந்த இந்த தேவதத்தன்"—"அந்த தேவதத்தனே இந்த தேவதத்தன்" என்பது இதன் பொருள்.

1895-வது வருடம் காசியில் வண்டியோட்டிக் கொண்டு இருந்த தேவதத்தன் என்பவனை கோவிந்தன் கண்டான். பிறகு 1914-வது வருடம் தஞ்சையில் அதே தேவதத்தனை அரசனாக இருக்கக் கண்டான். அப்போது கோவிந்தன் (சோ+அயம்—சோ=அவன் அயம்=இவன்) "அந்த தேவ தத்தன்தான் இந்தத் தேவதத்தன்" என்றான்.

இதில் அந்த என்பது 1895-ம் வருடத்தையும், காசியையும், வண்டியோட்டும் தொழிலையும் குறிக்கிறது. இந்த என்பது 1914-ம் வருடத்தையும், தஞ்சையையும், அரசத் தொழிலையும் குறிக்கிறது. இப்போது முன் குறித்த காலம், இடம், தொழில் முதலியவையும், இப்போது குறிக்கும் காலம், இடம், முதலியவையும் ஒன்றற் கொன்று விரோதமாக விருப்பதால் இந்த வாச்சியார்த்தங்களை விட்டு விட்டு, அவைகளை யநுசரித்திருக்கின்ற லட்சியார்த்தமான தேவதத்தனை மட்டும் விடாமல் "அந்தத் தேவதத்தனே இவன்" என்று பொருள் கொள்கிறோம். இதுவே விட்டு விடாத இலட்சணையாம். இதற்கே பாகத்தியாக இலட்சணை என்றும் பெயர்.

தரு, இனி தாஷ்டாந்தத்தில் விட்டு விடாத இலட்சணையால் பொருள் கொள்வதைப் பற்றி அறிவிக்கிறர்.]

தத்பதத்தின் வாச்சியார்த்தம் எல்லா ஸ்தூல தேகங்களையும் தனக்குத் தூலதேகமாகவும், எல்லாச் சூக்கும தேகங்களையும் தன் சூக்கும தேகமாகவும், அவ்வாறே சர்வஞ்ஞத்வாதி குணங்களையும் உடைய ஈசுவரனாகும்.

இதுபோன்றே ஸ்தூல சூக்குமாதி தேகங்களையும், சாக்கிராதி அவஸ்தைகளையும், அற்பஞ்ஞத்வாதி குணங்களையுமுடைய சீவனே தொம்பதத்தின் வாச்சியார்த்த மாகும்.

இந்த இரண்டின் வாச்சியார்த்தங்கள் பேத முடையவைகளாதலின் இவற்றை, விட்டு விட்டு, சீவசாக்ஷியாகிய கூடஸ்தன், சர்வசாக்ஷியாகிய

பிரமம் என்ற இலட்சியார்த்தங்களை விடாமல், கூடஸ்த னாகிய நீயே பிரம்மம் என்று ஐக்கியத்தை யுணர்வதே விட்டுவிடாத இலட்சணையால் பொருள் கொள்வதாகும். இந்த இலட்சியார்த்தத்தால், சீவன் ஈசுவரன் இரண்டும் மாயையாற் கற்பிக்கப் பட்டன வென்றும், இக்கற்பனைகளில் பேதமிருப்பதால் இந்த இரண்டிற்கும் ஐக்கியம் கூடாதென்றும், இக் கற்பனைகள் யாவையும் ஒழித்தவிடத்து இரண்டிலும் சாக்ஷி மாத்திரமாக விருக்கும் சுயமான சித்தில் பேதமின்மையால் 'அதுவே யிது இதுவே யது' என்று கருத்திற் கொள்ள வேண்டும்.

(ஆன்ம பரமான்மாக்களின் அபேதத்திற்குத் திருட்டாந்தம்.)

கடஜலத்தில் தோன்றும் பிரதி பிம்ப ஆகாயமும், மேகஜலத்தில் பிரதிபிம்பித்துத் தோன்றும் ஆகாயமும் இரண்டும் கற்பிதங்க ளாதலின் பொய்யே யாகும். ஆனால் கடாகாசமும் மகாகாசமும் இரண்டும் எப்போதும் பேதமின்றி ஏகமேயாகும். அகண்ட ஆகாயத்தி லிருந்து கடத்தால் பிரிக்கப்பட்ட ஆகாயமும் கடத்திற்கு இடங்கொடுத் திருக்கும் ஆகாயமும் சேர்ந்து கடாகாயம். வெளியாகாயம் அகண்ட ஆகாயம். இங்கு அகண்ட ஆகாயம் ஒன்றே என்றும் உள்ளது. கட ஆகாயம் அகண்டாகாயத்தின் ஓர் பாகமாக எப்போதுமே யிருந்துகொண் டிருக்கிறது. இடையில் கடம் பிரவேசித்து அகண்டாகாயத்தி னின்றும் அதை வேறு பிரித்துக்(கடாகாயம் என்று)காட்டுகிறதே யன்றி, அது உண்மையில் மகாகாயத்தோடு ஏகமாய் எப்போது மிருப்பதே என்பதை யூகித் துணரவேண்டும்.

சீடனே! அதுபோல் சர்வ வியாபகமான பிரம்மமும் சீவசாக்ஷியும் எப்போதும் ஏகமேயாகும். அவற்றில் பேதமேயில்லை. இந்த ஐக்கியம் திடமாகச் சித்தித்தற்பொருட்டு "சிவோகம்" பாவனைசெய். அதாவது "சிவமே நான்—நானேசிவம்" என்று சர்வகாலமும் சிந்தனை செய். இதுவே பிரம்மாநுபூதியில் இருப்பதாகும்.

"அகண்டவறி வானபர சிவமே நானென்
றனவரத மிடையறவே செய்யுந் தியானம்
புகன்றஉபா சனையாகு மதனா லுண்மை
பொருந்தியநற் புந்தியினாற் பரசி வத்தை
நிகழ்ந்திடவே யறிந்திடலா மற்றொன் றாலு
நிருமலமா யறியவொணா தாத லாலே
பகர்ந்தகுரு வசனத்தாற் பரசி வத்தைப்
பத்தியுட னென்றுமுபா சிக்க வேண்டும்.

சின்மயமாம் சிவத்தினிடை சித்தம் வைத்துச்
சிவமதுவே நாமென்றிங் கறியா தோர்க்குச்
சன்மயமாம் பரப்பிரமந் தானே யாகிச்
சலியாம லிருப்பதுவாம் விதேக முத்தத்
தன்மையொரு காலத்துஞ் சித்தி யாது
தத்துவமாய் நவில்கின்றே னிதாக வென்றே
நின்மலமாய் ரிபுமுனிவன் விதேக முத்த
னிலைபெற்ற விலக்கணமே நிகழ்த்தி னானல்" (ரிபுகீதை)

(தொடரும்.)

இல்லறம்—விவாகம்

(373-ம் பக்கத்தொடர்ச்சி)

விவாகம் என்பதற்கு வகித்தல் என்பது பொருள். அதாவது ஏற்றுக்கொள்ளுதலென்பது என்ற பொருளிலேயே உபயோகிக்கிறார்கள். அதுவுங்கருத்தேயாயினும் முன்னோர்கள் கருத்து அதுமாத்திரமேயல்ல. பின் என்னவெனில், தம்பதிகளிருவரும் தமது சரீரகுணங்களை யொருவர்க்கொருவர் மாற்றிக்கிரகித்துக்கொள்வது என்பதுமாம். புருஷனுடைய சரீரகுணத்தைப் பெண் கிரகித்துக்கொள்வதும், பெண் சரீரகுணத்தைப் புருஷன் கிரகித்துக்கொள்வதுமாம். ஸ்பரிச மாத்திரையால் சரீரம் மற்றொரு சரீரகுணத்தைக் கிராகியம் செய்யு மியல்புள்ளது என்று முன்னரே கூறினோம். அதனாலேயே பிராமணர்கள் தொட்டால் தீட்டு என்று ஸ்நானம் செய்வார்கள். தம்பதிகளிருவர் சரீரமும் ஒருதன்மையவாகவேண்டுமென்பது இல்லறத்தின் முக்கிய நோக்கம். என்றாலும் பரிபாக முதிர்ச்சியால் புருஷசரீரம் சிறப்புடையதும், பரிபாகக் குறைவானால் பெண்சரீரம் தாழ்வுடையதுமாமென்பது முன்னரே விரித்தோம். அதனைக் கவனிக்கவேண்டும். ஆதலால் ஆண்குணத்தையே பெண் அதிகமாகக் கிரகிக்கவேண்டும். திடதைரிய வீரியங்களினாலும் அறிவினாலும் சிறந்தவனுக்கு அது அதிகமாக வேண்டுவதில்லை. அதிகமாகப் பெற்றால் புருஷகுணம் சிறிது சிறிதாக ஒழியப் பெண்குணமே மேலிடும். சற்சந்ததி யுண்டாவதற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவே கொள்ளவேண்டும். அதனாலேயே பெண்ணைவிட மூன்றுபங்கு வயதுள்ளவனே அந்தப்பெண்ணை மணக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டது. இயல்பினாலேயே மென்மையும், வயதினால் இளமையுமுள்ள பெண்சரீரம் முதிர்ந்த ஆடவன் சரீர குணத்தைச் சீக்கிரமாகவும் அதிகமாகவும் கிரகிக்கும். பேதைப்பருவங்கடந்த பெதும்பைப் பருவத்துப் பெண்சரீரம் அதி சீக்கிரமாகத் தன் கணவன் சரீரத்தைப் பெறும். எழாம் வயதுக்கு மேல் எட்டு ஒன்பது வயதுக்குட்பட்ட கௌரியென்னும் பருவமே பெண்களுக்கு உபநயன ஸமஸ்காரமாகிய விவாக காலமாக விதிக்கப்பட்டது.

புருஷரிலும் ஐந்து வயது முதல் குருகுலவாசம் செய்து வேதாதிகலைகளை யோதியுணர்ந்து, ஸமாவர்த்தன மென்னுங் கிரியையைச் செய்து பிரமசரிய விரதத்தை முடித்தவனே இந்தவிவாகத்துக் குரியவனாம். குருகுலவாசத்தினாலும் பிரமசரிய விரதத்தினாலும், வேதாதிகலைகளை யோதுவதனாலும், குரு பணிவிடைகளினாலும், இலௌகிக சம்பந்தமானவற்றை (அதாவது உலகவிஷயங்களை) யுணராதிருப்பது அப்பருவமே யாதலால், அப்போது அவனுக்குக்காதல் இன்னதென்று தெரியாமலிருக்கும். இப்போது அவனுக்கு இருபதுக்குமேல் இருபத்தைந்துக்குள்பட்ட யௌவன பருவமாகும். இக்காலத்தில் அவனுடைய அந்தக்கரணங்களும் புறக்கரணங்களும் மிகப் பரிசுத்தமாய்க் களங்கமற்றிருக்கும். கௌரி என்னும் பருவப் பெண்ணுக்கும் மனதும் தேகமும் களங்கமற் றிருக்கும். ஏனெனில், அப்பெண் உலக விவகாரமின்னதென்று அறியாமலிருப்பதால், இவ்விதமாக இயல்பிலேயே பரிசுத்தமாயிருக்கிற ஆண்பெண் சரீரங்களே உலகாபிவிருத்திக்குரிய சற்சந்தானங்களை யுண்டாக்கும் தன்மையுடையனவாம். இவ்விஷயங்களைச் செவ்வையாய்ப் பரிட்சித்தறிந்தே மாதா பிதாக்கள்

தம்பதிகளின் விவாகத்தை நிறைவேற்ற வேண்டும். இவ்விவாகம் பிராம்ம விவாக மென்று புகழ்ந்து கூறப்படும்.

இதுவுமன்றிப் பெண்ணையும் புருஷனையும் பெற்ற மாதாபிதாக்களும் பரம்பரையாகச் சிறந்த வம்சத்திற் பிறந்தவர்களாயிருக்க வேண்டும். தாய் வழி தகப்பன்வழி யிரண்டும் பழிப்படாதனவா யிருந்தாலன்றிச் சற்சந் தான விருத்தி யுண்டாகாது. இருவழியும் குட்டம், அபஸ்மாரம், குன்மம் முதலிய நோயற்றன வாயும், பழிக்கப்படாதனவாயும், ஆஸ்திகபுத்தி யோடு கூடியனவாயும், மற்றுமுள்ள சற்குணங்கள் நிறைந்தனவாயு மிருக்க வேண்டும். மாதா பிதாக்களினுடைய வம்சபரம்பரையை ஒட்டியே சிசுக் களுக்குக் குணவிசேஷங்க ளுண்டாவதால் இவ்விஷயத்தில் அதிகசிரத்தை யுடன் பரீக்ஷை செய்தே விவாக முடித்தல் வேண்டு மென்பது முன்னோர் கொள்கை. இதை அனுசரித்தே வதூவரர்களைப் பரீட்சித் தறிவதற்கு ஸ்மிருதியாதி நூல்கள் சில இலக்கணங்கள் கூறின.

அவையாவன:—செந்நிறமான தலைமயிருள்ளவள், புருஷனுக்கு வய தில் சிறியவளாயினும் பெருத்த சரீரமுடையவள், தீராதரோக முடைய வள், தேகம் முற்றும் ரோமமுள்ளவள், தலைமயிர் குறைந்துவருபவள், பல பேருடன் வாதாடுகிறவள், பூனையின் கண்போன்ற கண்ணுடையவள், தலைமயிரைப்போன்ற நிறமுள்ளவள், நட்சத்திரத்தின் பேரையுடையவள், மரப்பெயருடையவள், நதியின் பேரையுடையவள், பாம்பு பட்சிகளின் பேருள்ளவள், பயங்கரமான பேருள்ளவள், அதிக போஜனம் செய்பவள் இவர்களை விவாகம் செய்யக்கூடாது. அதிக பருமனுயிருந்தால் கருத்தரிப் பதரிது. தேகமுற்றிலும் மயிருள்ளவள் சிற்றின்பத்தில் அதிக விருப்ப முடையவளாயிருப்பாள். தலைமயிர் குறைபவளுக்குப் போகத்தில் விருப்ப மிராது. மற்றைய யூகித்துக்கொள்க. மிகக் குட்டையானவளும், மிகவும் நெட்டையா யிருப்பவளும், பொன்வண்ண மான விழியை யுடையவளும் அதிக வெள்ளையான நிறமுள்ளவளுமாயிருப்பவள் புருஷனுக்கு மிருத்தியு வாவாள். பந்துவில்லாதவள் சகோதரர்க ளில்லாதவள் விவாகத்துக் கேலார் கள். முழங்கால் தொடைகளில் மயிருள்ளவள் ஆகாது. கால்முளிபருத் திருப்பவளும் பாதம் பூமியில் படாமல் உயர்ந்திருப்பளும் விவாகத்திற் கருகரல்லர்.

ஆடவர்களிலும் இவ்வாறே கொள்ளத் தக்கது. அன்றியும் பைத்தியம் பிடித்தவன், பதிதன், குருடன், செவிடன், காக்காய்வலியென்னும் ரோக முள்ளவன் இவர்களுக்குப் பெண்கொடுக்கவுங் கூடாது. இத்தகைய பெண் களைக் கொள்ளவும் கூடாது. இக்குற்றங்களெல்லாம் பரம்பரையாய்த் தொடர்ந்து வருமாதலால் விலக்கப்பட்டன. இவ்வகைக் குற்றங்க ளில் லாத பெண்ணுக்கும் புருஷனுக்குமே விவாகம் சிறப்புடையதாம். ஆகை யால் நன்றாய்ப் பரிக்ஷித்தறிந்தே விவாகம் நடத்த வேண்டும்.

எட்டுவயதுள்ள பெண்ணை இருபத்துநான்கு வயதுடைய ஆடவனுக் குக் கொடுக்கவேண்டும். பனிரண்டு வயதுடைய பெண்ணை முப்பத்திரண்டு வயதுடைய ஆடவன் மணக்க வேண்டும். விவாக கிரியையில் பாணிக்கிர கணம் (கையைப்பிடித்தல்) என்பதே விசேஷம். ஆதலால்தான் விவா கத்தைப் பாணிக்கிரகண மென்றும் சொல்வது வழக்கம். இவ்வித விவா கத்தைச் செய்கையில் முதலில் தம்பதிகளுக்கு அப்பியங்கன ஸ்நானம்

செய்விக்க வேண்டும். இவ்வப்பியங்கன ஸ்நானத்தினால் சரீரத்திலுள்ள மலங்கள் ஒழிந்துபோம் என்றும், உள்ளும் புறம்புமாகிய அவயவங்களும் நரம்புகளும் இளகி மிருதுத் தன்மையை யடையுமென்றும் ஸ்நானப் பிரகாணத்தில் கூறப்பட் டிருக்கின்றது. அப்பியங்கன ஸ்நானத்திற்குக் கூறியுள்ள விதியைக் கவனிக்க வேண்டும். இந்த ஸ்நானத்தினால் தோல்மெதுவாய்விடும். சரீரத்துக் குள்ளிருக்கும் மலம் ஆவியாய் வெளிப்பட்டு விடும். எட்டுவயதுள்ள இளம்பெண் சரீரம் அதிகமாய் மேன்மைப்பட்டு பலமொழிந்து களங்கமற்றதா யிருக்கும். இரத்தமும் சற்று இளகியே யிருக்கும். ஓம முன்னிலையி லுட்கார்ந்திருப்பதினால் அக்கினியின் வெப்பம் தாக்கச்சரீரம் இன்னும் அதிகமாய் மெதுப்படும். இச்சமயத்தில் பெண்வயதுக்கு மூன்றுபங்கு அதிகவயதுள்ள ஆடவன் தன் கையால் பெண்ணின் கையைப் பலமுறைப் பற்றுவதால் அவனுடைய சரீரகுணம் வெகு எளிதாய் பெண்ணின் சரீரத்தில் பிரவேசித்துவிடும். முதிர்ந்த சரீரத்தின் சக்தியை மிருதுவான பெண்சரீரம் வெகு சீக்கிரத்தில் கிரகிக்கும். ஆடவனும் அப்பியங்கனத்தாலும் க்ஷௌரத்தினாலும் பரிசுத்தனாய் மாசற் றிருப்பதினால் அவனது களங்கமற்ற சரீரகுணமே பெண் சரீரத்தில் செல்லும். பாணிக்கிரகண காலத்தில் பெண்ணின் வலது கரத்தைப் புருஷன் பலமுறை பற்றுவதால், பெண்ணினது பவித்திர விரலில் நிற்கும் மூன்று நாடிகளின் முடியின்வழியே புருஷ சக்தி அவள் சரீரமுற்றும் பரவும். நெடு நேரம் புருஷனுடன்கூட உட்கார்ந்திருக்க நேர்தலால் பெண்சரீரத்திலுள்ள மயிர்க்காலின் வழியாயும் புருஷசக்தி பிரவேசிக்கும். ஒரு சரீரத்தின் சக்தி தன்னைச்சூழ ஒருமுழ தூரத்துக்குப் பரவும் என்பது வைத்தியவிதி. ஆதலால் புருஷனுக்கு அதிக சமீபத்தி லுட்கார்ந்திருக்கும் பெண்ணை அது அடையுமென்பது கூறவேண்டுவதில்லை. இதனுண்மையை வியாதிக்காரர்களின் பக்கத்தி லுட்கார்ந் திருப்பதினால் பிரத்தியட்சத்தில் கண்டு கொள்ளலாம். அப்பியங்கன ஸ்நானத்தில் மிருதுவாயும், அக்கினியின் வெப்பத்தினால் உருகியுமிருக்கும் பெண்சரீரத்தில் செல்லும் புருஷசக்தி அதிக சீக்கிரத்தில் பெண்சரீரத்தின் உதரத்தோடு கலந்து சரீர முழுவதும் வியாபிக்கும். வேறு ஸ்பரிச சம்பந்த மில்லாமலும் புருஷனது சரீர குணத்தைக் கிரகிக்கக்கூடியதுமான பெண் சரீரமானது அப்போது புருஷனுடைய குணமயமாகவே மாறிவிடும். பிறகு சப்தபதி யென்று ஒரு கிரியையுண்டு. அந்தக் கிரியையில் புருஷன் தன்கையினால் பெண்ணினது பாதத்தைப் பற்றி ஏழடிதூரம் நடத்த வேண்டும். இதனால் பாதாங்குஷ்டத்தைப் பற்றிநிற்கும் நாடி வழியே புருஷகுணம் கிரகிக்கப் படுகின்றது. இவ்வாறே புருஷ சரீரமும் பெண்சரீரத்தின் சத்தியைச் சிறிது கிரக்கும் என்று கூறுவர். இதுவும் சரீர இயல்பாதலால் உண்மையேயாம். இதனால் ஆண்பெண் சரீரங்க ளிரண்டும் ஒரே தன்மையை அடைகின்றன. இதனால் மனைவி புருஷன் இருவர் சரீரமும் ஒரே சரீரமென்று கூறும் ஸ்மிருதிபுராண இதிகாசங்களின் கருத்து இன்னதென்று புலப்படுதல் காண்க.

மாறுபட்ட வியல்பினையுடைய விருவர் சரீரத்தையும் ஒன்றாகச்சேர்ப்பதே விவாக சம்பந்தமாகும் என்பது காண்க. சரீரம் வேறாகக் காணப்பட்டாலும் குணத்தினால் ஒன்றாதல் பற்றியே யிருவர்சரீரமும் ஒருசரீரமாமென்று நூல்கள் கூறின. இதனை யாக்ஷேபிப்பார் சிலருளராயினும் மேற்

கூறிப்போந்தவற்றைக் கூர்ந்து பார்ப்பவர்கள் ஆக்ஷேபனை செய்யாரென்க. இவ்வாறு பெண்சரீரம் புருஷன் குணத்தைக் கிரகித்துக்கொண்டு வளர்ச்சி யடையும்போது அக்குணத்துடனேயே விருத்தியாவதால் பெண் தன் கணவனைத் தனது சரீரமாகவே கருதுவாள். பாணிக்கிரகணம் முடிந்தபின் காற்றினால் சரீர மிறுகும்போது அக்குணமும் உதிரத்துடன் கலந்து இறுகி விடும். இதனாலேயே விவாகமான தம்பதிகளுக்குப் பகலில் போஜனம் விதிக்கப்படவில்லை. ஏனெனில் உடனே போஜனம் செய்வது கூடாது. போஜனம் செய்யும்போது உணவின் வெப்பத்தினால் வெயர்வை யுண்டாம் சரீரத்தின் உள்ளிற்பொதிந்துள்ள உதிரம் சுக்கிலமாதிய விளக அவற்றின் அம்சமு மிளகி வெயர்வையின் வழியாய் வெளிப்படுமென்பது உண்மை யான விதியாதலா லென்க. சாயந்திரத்தில் ஔபாசன மென்ற ஒரு அக் கினி காரியமும் அந்தணர்களுக் குள்ளது. இந்த ஔபாசன கிருத்தியம் முடிந்தபின்புதான் போஜனம் விதிக்கப்பட்டது. இந்தக் கிரியை விவாக நாள் நான்கிலும் செய்யப்படுவது மன்றிச் சேஷஹோமம் என்று ஐந்தாநாளும் செய்யப்படும். இந்த நாலுநாட்களிலும் வதூவரர் இருவரும் ஸ்நானம் செய்யக்கூடா தென்பதும் விதி. ஸ்நானத்தினால் அச்சக்தி சிறிது குறையு மென்பது கருதியேயாம். இந்த நான்கு நாட்களும் வதூவரர் இருவரும் தனித்திருக்கக் கூடாதென்பது மோர்விதி. போஜனம் செய்யும் போதும் இருவரும் சேர்ந்து உட்கார்ந்தே புசிக்க வேண்டும். ஒருவர்க் கொருவர் உணவுகளை மாற்றிக்கொள்வதும் இயல்பு. இக்காலத்தில் இவ்வாறு செய் வது பரிகாச மாய்விட்டது. யுகாந்தரங்களில் இருவரும் ஒரே கலத்தில் புசிப்பது வழக்கமென்று தெகிரிறது. (தொடரும்.)

சிவானந்த சாகர யோகீஸ்வரர்.

ஓர் முக்கிய அறிவிப்பு.

நமது அன்பார்ந்த சந்தாதாரர்கள் கீழ்க்காணும் நமதுவேண்டு கோளைச் சற்று கவனித்து அவ்வாறே நடந்து கொண்டு நமக்குப் பேருதவி செய்யு மாறு கோரிக் கொள்கிறோம்:—

ஒவ்வொரு வருடமுடிவிலும் அடுத்த வருட சந்தா பணத்தை முன் பணமாக அனுப்பி விடுவதால் சஞ்சிகை ஆலசிய மின்றிச் சந்தா தாரர்களு க்கு வந்து சேர்வதோடு, நமக்கும் எவ்வளவோ கஷ்டங் குறைகிறபடியால் அவ்வாறனுப்பும்படி கேட்டுக் கொள்ள வேண்டியதாகிறது. ஆனால் நாம் எவ்வளவு தெளிவாய் எழுதினாலும் அனேகர் சந்தா நம்பரைக் குறிக்கா மலும், தவறான நம்பர் குறித்தும் அனுப்பி விட்டு நமக்கு வீண் சிரமை கொடுப்பதோடு, பிறகு "சஞ்சிகை அனுப்பவில்லை அல்லது பணம் அனுப் பியிருக்க வி.பி. யிலனுப்பி விட்டீர்கள்" என்று நம் மேலேயே குறை கூறுகிறார்கள். சந்தா நம்பரைக் குறிப்பிடுவதில் ஒரு கஷ்டமுமில்லை. சஞ்சிகையின் அச்சடித்த மேல் விலாசத்துண்டில் பெயருக்கு முன் சந்தா நம்பர் அச்சிட்டே யிருக்கிறது. சந்தா நம்பரை மறந்துள்ளவர்கள் கூட இதை வாசிக்கும்போது உடனே குறித்து வைத்துக் கொள்ளலாம். மேல் விலாசத்தைக் கிழித்தெறிந்து விட்டிருந்தால் மறவாமல் அடுத்த மாத சஞ்சிகை வரும்போது அதைப் பிரிக்கு முன்பே நம்பரைப் பார்த்து குறி த்து வைத்துக் கொள்ளலாம்.

ஆகையால் ஒவ்வொரு சந்தாதாரரும் தயவு செய்து கீழ்க்குறிப்பிட்ட விஷயங்களைக் கவனத்தில் வைத்து அவற்றின்படி நடந்து கொண்டு சஞ்சிகையின்மேல் தங்களுக்குள்ள மெய்யன்பை வெளியிடுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

(1) மணியார்டர் கூப்பனில் சந்தா நம்பரையும், முழுவிலாசத்தையும் மட்டும் தெளிவாய் எழுத வேண்டும். சமாசாரம் "6-வது வருட சந்தாவை யனுப்பி யிருக்கிறேன்" என்றுமட்டும் எழுதினால் போதும்; அதிக வீண்வார்த்தைகளை யெழுதி நம்பர் பெயர் முதலியவை விளங்கா வண்ணம் செய்து விடலாகாது.

(2) இரண்டு மூன்று பேர் சேர்ந்தனுப்பவதாயின் மணியார்டரில் அதை யனுப்பு கிறவர் தம் நம்பர் பெயரைமட்டும் எழுதிவிட்டு "இத்துடன் விவரக் கடிதம் அனுப்பியிருக்கிறேன்" என்று எழுதி விட வேண்டும். அதே தினம் மற்ற சந்தாதாரர்களின் நம்பர்கள் விலாசங்கள் இவற்றை வேறொருகடிதத்தில் தெளிவாய் எழுதியனுப்ப வேண்டும்.

(3) புதிதாய்ச் சேர்வோர்களாயின், இந்த நபர்கள் புது சந்தாதாரர்கள் என்று குறிப்பிட வேண்டும்.

(4) சந்தா நம்பர் சரியாகத் தெரியாதவர்கள் விலாச மட்டும் எழுதிப் பணம் அனுப்பலாகாது. அவர்கள் பேசாமலிருந்து வி. பி. வரும் போது பணங்கட்டிப் பெற்றுக் கொண்டால் நமக்கு மிக்க உதவி செய்ததாகக் கருதுவோம். நம்பரைக் குறிக்காமலனுப்பி விட்டுப் பிறகு சஞ்சிகை வி. பி. யில் வந்ததென்று குறைகூறலாகாது. அத்தகையோர் வி. பி. நஷ்டத்தை ஒப்புக் கொள்ளவேண்டும்.

(5) இரண்டு மூன்று பேருக்குச் சேர்த்துப் பணம் அனுப்புவோர்கள் அதில் நம்பர் குறிக்கப் படாதவர்களுக்குப் பணம் அனுப்பினால் மேல் 4-வதில் கண்ட விதியையே ஒப்புக் கொள்ள வேண்டும்.

(6) 1920ஹ ஜூலைமீ 10உக்குள் பணம் நம்மிடம் வந்து சேரும்படி அப்பாதவர்களுக் கெல்லாம் வி. பி யில் சஞ்சிகை யனுப்பப் படும். வி. பி. அனுப்பப்பட்ட பின் பணம் நம்மிடம் வந்தந்தால், அத்தகையோர் வி. பி. நஷ்டத்தை யொப்புக் கொள்ள வேண்டும்.

(7) பினங் சிங்கப்பூர் முதலிய அன்னிய நாட்டுச் சந்தா தாரர்களில் வி. பி. வாராத இடங்களிலுள்ளவர்கள்(பினங்,சிங்கப்பூர், மலாக்கா இந்த மூன்றிடங்களுக்கு மட்டுமே வி. பி. வரும்) ஜூலைமூ 1உக்குள் சந்தாத் தொகை இங்குவந்து சேரும்படி போஸ்டல் ஆடர் அல்லது மணியாடர் அனுப்பிவிட வேண்டும். அங்கிருந்து ஜூன்மீ 1உ முதல் 15—16-ம் தேதிக்குள் அனுப்பி விடவேண்டும். மேல் குறிந்த 3 நகரங்களிலுள்ளவர்களில் முன்பண மனுப்ப விரும்புவோரும் அவ்வாறே யனுப்பி விட வேண்டுமாய்க் கோருகிறோம்.

(8) விசேஷக் குறிப்பு—மேல் குறித்த தவணைக்குள் சரியான சந்தாநம்பரோடு சந்தாத் தொகையை யனுப்பி விடுவோர்களுக்கு மட்டும் துன்முகி வருடத்திய ஆனந்தபோதினி சர்வமுகூர்த்த பஞ்சாங்கம் ஒன்றினுமாக அனுப்பப் படும்.

பத்திரிகாசிரியர்.

இந்து நண்பர்க்கோர் எச்சரிக்கை.

அன்புமிக்க நம் ஆனந்தபோதினியின் சந்தாதார சகோதர சகோதரிகளே!

கடந்த 17-12-19 புதன்கிழமை யன்றைய தினம் இரவு சுமார் 8-மணிக்கு, திருச்சினுப்பள்ளியில் எமது வர்த்தகத் தொழிற்சாலைக்குச் சமீபமாயுள்ள (கிறிஸ்து லூதரின் மிஷனைச்சேர்ந்த) சியோன் கோவிலில் ஜனங்கள் கூட்டமாக நின்றுகொண் டிருந்தார்கள். அவர்களின் நடுவில் ஒரு ஆடவனும் வயது சென்ற இரண்டு பெண்களும் ஒரு சிறு பையனும் இருந்தார்கள். ஒவ்வொருவர் முகத்திலும் துக்கமும் கண்ணீரும் நிறைந் திருந்தன. நான் அம்மனிதரை அணுகிக் காரணம் என்ன? என வின வியபோது அவர் அடியில் வரு மாறு பதிலுரைத்தார்.

"நாங்கள் இருப்பது சிதம்பரம்; சைவமதம்; பெண்கள் இருவரும் என் தமக்கையும் மாமியும்; இந்தப் பையன் எனது குமாரன். என்னுடைய வீடுகளில் ஒரு பெரிய வீட்டைப் பெண் பாடசாலைக்காக வாடகைக்கு விட்டிருந்தேன். அந்தப் பாடசாலையில் உபாத்தினி வேலையாயிருந்த கிறிஸ்தவப் பெண்பிள்ளை என் மனைவிக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்து வந்தாள். சுமார் 5 மாதகாலம் வரை மேற்படி உபாத்தினிக்கு என் வீட் டிலேயே சாப்பாடும் நடந்து வந்தது. அதைப் பற்றி எனக்கு எவ்வித மான யோசனையும் உண்டாகவில்லை. சுமார் ஒரு வாரத்துக்கு முன்பு வெளியிற் போயிருந்த நான் வீட்டிற்குச் சென்று என் பசிப் பிணியை அகற்ற என் அருமை மனைவியை அழைத்தேன்; பதில் இல்லை. மறு முறையும் அழைத்தேன் பதில் இல்லை. வீட்டின் ஒவ்வொரு அறைகளை யும் பார்த்தேன்; அக்கம் பக்கத்து வீடுகளிற் போய்ப் பார்த்தேன்; எங் கும் இல்லை. நான் பலவிதமான யோசனைக்குள்ளாகித் துக்கமடைந்தேன். சில தொகைகளும் செலவாயின. என்மனையாட்டி என்னை விட்டுப் பிரிந் ததாகத் தெரிய வந்தது. அதன் மேல் விஷயம் தெரிந்து அதற்காக வேண்டி பிரயத் தனப்பட்டு விசாரித்துக் கடைசியாக இவ்வூரில் கெம்ஸ்ட வுன் போர்டிங் பெண்பாடசாலையில் கிறிஸ்துமார்க்கத்தில் என் மனைவி இருப்பதாகத் தெரிந்து, இன்று காலையில் நாங்கள் நால்வரும் அங்கு சென் றோம். போர்டிங் மிசியும் உபாத்தினிகளும் மற்றவர்களும் எங்களை உள்ளே நுழைய விடவில்லை. அதன் பிறகு நாங்கள் எங்களின் விதியை நொந்து கொண்டு அவ்விடத்திலேயே பகல் முழுதும் காத்திருந்தோம். மாலை சுமார் 6½மணிக்கு அவ்விடத்திலிருந்து எல்லோரும் புறப்பட்டு வெளி யில் வந்தார்கள். என் மனைவியையும் கண்டு நாங்கள் பின் தொடர்ந்தோம். இது சமயம் இந்தக் கோவிலில் இருக்கும் கிறிஸ்தவர்களில் என் மனை வியும் ஒருத்தி. என் மனது ஒருவிதமான நிலைமைக்கும் வரவில்லை. நான் என்ன செய்கிறது, தெய்வமே!" என்று கண்கலங்கினர்.

நேயர்களே! அது வரையில் மௌனம் சாதித்திருந்த பெண்களும் அழ ஆரம்பித்து விட்டார்கள். அவருடைய சிறுபையனும் அம்மா! அம்மா!! என்று கதறினன். அவர்களின் நிலைமை மிக்க பரிதாபகரமா யிருந்த தென்று நாம் வரைய வேண்டிய அவசியமில்லை. சிறிது நேரத்திற் கெல்லாம் கோவிலில் உள்ள ஒவ்வொருவரும் இதுவிஷயத்தைத் தெரிந்து கொண்டார்கள். இரவு மணி 8 ஆய்விட்டதாலும்; பைபில் உம்ன்களுக்

காக (பைபில் கற்பிக்கும் ஸ்திரீகள்) அன்று கோவில் வைத்திருந்ததால் பெண்களையும் ஜெபம் நடத்துகிறவர்களையும் தவிர வேறு ஆடவர்கள் கோவிலில் இல்லாததாலும், வெளியில் இந்து மதாபிமான கூட்டங்கள் கூடியிருந்ததாலும், நாட்டய்யரவர்கள் ஏதோ யோசனை செய்து, முடிவாக வெளியில் வந்து பெண்ணின் புருஷனை யழைத்து "கொஞ்சம் பொறு; இவ்விடத்திலேயே கோவில் வாசற் படியில் இரு; எவ்விதமான குழப்பமும் செய்யவேண்டாம்; கோவில் வேலைமுடிந்த பின் உன் பெண்ஜாதியை உன்னிடம் ஒப்புவிக்கிறேன்" என்று சொன்னார். அந்த வார்த்தையை நம்பி, அதனால் ஆறுதலடைந்து என் குடும்பத்தை இரக்ஷியுங்கள் என்று அவர் பாதத்தைத் தொட்டு வணங்கினார்.

சொத்து உடையவராயிருந்தாலும், கலங்கிய மனதை உடையவராயிருப்பதால், தன் பெண்ஜாதியின் பிரிவாற்றாமையை முன்னிட்டு அவர் அவ்விதம் செய்யும்படி நேரிட்ட தென்று நான் யோசித்துக்கொண்டேன். பிறகு 8¼ மணிக்குக் கோவில் கலைந்தது. அதே நிமிடம் "ஒருவரும் வெளியிற் போக வேண்டாம்" என்று அவர்களுக்குள் ஒரு கட்டளை யிட்டுக் கொண்டார்கள். சுமார் 15 நிமிஷம் வரை ஒருவரும் வெளியில் வராமற் கூட்டங் கூட்டமாய் நின்று யோசனை செய்துகொண் டிருந்தார்கள். அவர்கள் யோசனை வெளியில் இருக்கும் பெண்ணின் சொந்தப் புருஷனுக்கு அனுகூலமோ பிரதிகூலமோ நாம் அறியோம். பைபில் உமன்களுக்கு இராப் போசனம் கொடுப்பதற்காக மதுரையிலிருந்து ஸ்பெஷலாய் வந்திருந்த ஸ்வீடிஸ் ரெவரெண்டு ஒருவர் சிறிது நேரத்திற்கெல்லாம் வெளியில் வந்து.

Overcome not by force; but by kindness.

அதாவது பலவந்தத்தினாலல்ல பக்ஷத்தினால் வெல்லு, (ஆனால் பொய் சொல்லி ஏமாற்றி யல்ல) என்ற பழமொழிப்படி, பெண்ணின் புருஷனை யழைத்து "இது தேவாலயம்; இந்த விடத்தில் நாம் ஒன்றும் பேசப்படாது; நீயும் என் வண்டியிலேறி என் இருப்பிடத்துக்குவா; அங்கு போய்ப் பேசிக்கொள்ளலாம்" என்று சொல்லிக் குழந்தையையும் அவர்களுடன் வந்த பெண்களையும் பார்த்து, மிகுந்த சந்தோஷத்துடன் பேசி, அவர்களைச் சமாதானப் படுத்தினார். அதேசமயம் குதிரை பூட்டிய வண்டி ஒன்று வாசற்படிக்கு வந்தது. பெண்ணின் புருஷனை மட்டும் ஏற்றிக் கொண்டு, தமது பாதுகாப்பிலேயே அந்தப் பெண்ணையும் வைத்துக் கொண்டு, அவர்களின் இருப்பிடத்துக்குப் போய் விட்டார்கள்.

மறுதினம் பெண்ணைப் புருஷனுடன் அனுப்பவில்லை யென்றும், பெண் வரமுடியா தென்று சொல்லுகிறதாகவும், கிறிஸ்து மார்க்கத்தையே நம்பி விட்டதாகவும், "18 வயதுக்கு மேற்பட்ட பெண்களின் வார்த்தையை அவர்கள் அங்கீகரிக்கக் கூடியவர்கள் தான்" என்று சொன்னதாகவும், பெண்ணின் பேரில் பூரண விசுவாசம் இருந்தால் ஷை புருஷனும் கிறிஸ்து மார்க்கத்தை நம்பும் பக்ஷத்தில் பெண்ணுடன் சந்தோஷமாக வாழலா மென்று புருஷன் தூண்டப் பட்டதாகவும், தெரிய வந்தது.

ஆ! நம் இந்து மதாபிமான நேசர்களே! உண்மையாய் நடந்த இவ் விஷயங்களைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். நமக்கே இவ்வளவு வியாகூ

லங்கள் ஒன்றின் பின்னொன்றாய் உண்டாயின், "மரணம் நம்மிருவரைப் பிரிக்கு மளவும் சுகத்திலும் துக்கத்திலும் வாழ்விலும் தாழ்விலும் நாம் ஒருவரைவிட் டொருவர் பிரிவதில்லை" என்று ஆகாயவாணி பூமாதேவி சாக்ஷியாக மணந்த மணவாளரின் கதியாதாதும் "இதுதானோ பெண்கள் வாசிப்பதின் பயன்? இதற்குத் தானோ பெண்கள் அவசியம் வாசிக்க வேண்டுமென்று பத்திரிகைக ளெல்லாம் கோஷிக் கின்றன?" என்ற இதைப் போன்ற கேள்விகள் அன்று கூடிய கும்பலிலிருந்து பிறந்தன. "ஒருகாலுமில்லை. இத்தகைய வாசிப்பை நம் அருமை மக்களுக்குப் போதிக்க ஒருவரும் சொல்லியிருக்கமாட்டார்கள். எந்தப் பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்திருக்கமாட்டார்கள்." என்று நாம் பதில் சொன்னோம். குளித்துவரச் சொல்லியது உண்மைதான். ஆனால் நாம் அழுக்கைப்போக்கும் சுத்தஜலம் இருக்குமிடத்திற்குச் செல்லாமல் சேறுநிறைந்த விடத்தில் மூழ்கி யெழுந்து வந்து, ஸ்நானஞ் செய்துவரச் சொல்லி யனுப்பியவர் பேரில் வருத்தப்படுவது எவ்வளவு மதியீனம்!

அதைப் போலவே இல்லறம் என்னும் இரதத்தை நடத்தப் பெண்களும் வாசித்திருப்பின் அது ஒழுங்குடன் நடைபெறுமென்று கற்றோர்கள் தெரிவித்திருந்தால், இல்லறந்தையே அடியோடு தொலைத்துவிடக்கூடிய படிப்பைக் கற்றுக் கொடுப்பது யாருடைய குற்றம்? பெண்கள் வாசிக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் பெற்றோர்களுக்கு உதித்தவுடன் அன்னியமார்க்கப் பாடசாலைகளுக்கு அனுப்பி விடுகிறார்கள். வயது வந்த பெண்ணாயின், பைபில் உமனிடம் "என் மகளுக்குக் கல்வி கற்றுக் கொடுங்கள்" என்று உத்திரவு கொடுத்துவிடுகிறார்கள். எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற இந்த உத்திரவு அவர்களுக்குக் கிடைத்தவுடன், அவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டு பாடஞ் சொல்லிக்கொடுத்துப் புஸ்தக பாடமும் கற்பலகைக் கணக்கும் தீர்ந்தவுடன் கட்டிவைக்கச் சொல்லிவிட்டு, (தாம் வலுவில் தேடிக்கொண்ட பெண்களுக்கு ஒவ்வொரு வேதக்கதைகளை மட்டுஞ் சொல்லிவந்தால்) இத்தகைய பெண்களுக்கு இரண்டிரண்டு வேதக் கதைகளைச் சொல்லிவருகிறார்கள்; மறுநாள் வந்ததும், தாம் முதல் நாளில் சொல்லிப் போன கதைகளை அவர்களிடம் சரிவரக்கேட்டுக்கொண்டு, இரண்டாவது...பாடஞ் சொல்லிக் கொடுத்து, மூன்றாவது . . வேறு புதுக் கதைகளைச் சொல்லிப் போகிறார்கள். கதைகளைச் சொல்லிக் கொடுக்கும் பொழுது "வீட்டிலுள்ளோர் எப்போது வந்துவிடப் போகிறார்களோ" என்ற பயத்துடன் அவர்கள் படுங் கஷ்டத்தை தேவன்தான் அறியவேண்டும்! (அவர்கள் செய்கை நல்ல எண்ணத்தோடு கூடிய செய்கையாயின் என் பயப்பட வேண்டும்)

பைபில் உமனால் உங்கள் அருமைக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் பெற்றோர்களே! பைபில் உமன் (Bible women) என்ற ஆங்கிலபதத்திற்குக் கிறிஸ்துவேதப் பெண்கள் என்று பொருள்படும். கிறிஸ்து வேதங்களைப் பிரசங்கித்து, அதை நம்பும்படிச்செய்து, அவர்களின் மார்க்கத்தில் பிறரைச் சேர்த்துவிடுவதற்காகவே அம்மதத்தலைவர் அக்கூட்டங்களை ஏற்படுத்திக் கிறிஸ்துவேதப் பெண்பிள்ளை யென்ற பெயருங்கொடுத்து சம்பளமுங் கொடுத்து வருகிறார்கள். ஆனால் நீங்கள் அவர்களுக்குக் கொடுக்கும் பெயரோ, உபாத்தினி அல்லது உபாத்தியாயரம்மாள், சென்னை மாகாண

த்தில் மட்டும் ஆயிரக்கணக்கான பைபில் உமன்கள் இருக்கிறார்கள். அவர்களின் சூழ்ச்சியால் அகப்பட்டு மயங்கிநிற்கிற 12-வயதுக்கு மேற்பட்ட பெண்மணிகளின் தொகை 10,000க்கு அதிக மிருக்கலாம். எத்தனையோ குடும்பங்கள் இதனால் சிதறி அழிந்து போய்விட்டன. மனித சுபாவமே தவறுதலுடையது; அதிலும் பெண்களைப்பற்றிச் சொல்லவேண்டுவதில்லை; பெண்களிலும் நம்பால்யப் பெண்களின் அறிவு மிகவும் சுவல்பம்; அவர்கள் அதிசீக்கிரம் இது விஷயத்தில் தவறிவிடக்கூடும்; அவர்களின் இருதயம் புகைப்படம் பிடிக்கப்போகும் சாம்பல் வர்ணமுள்ள கண்ணாடிக்குச் (Plate of Photo) சமமானது. எது தன்னெதிரில் தென்படுகிறதோ அதையே தன்னில் பதித்துக்கொள்ளக் கூடிய சக்தி வாய்ந்தது. இத்தகைய மக்களுக்கு மேற்கூறிய உபாத்தினிகளால் பாடங்கற்பிக்கின், பலவித துன்பத்திற்கு ஆளாகவேண்டு மென்பதற்கு, மேற்கூறிய உண்மையான சரித்திரமே போதிய சான்றாகும். ஆதலால், இனியேனும், இதுவிஷயத்தில் ஜாக்கிரதையாயிருந்து, மார்க்க விஷயத்தில் பாரபக்ஷமின்றிக் கல்வி போதிக்கக் கூடிய கருணையும் நீதியும் பொருந்திய துரைத்தனத்தாரவர்களின் பாடசாலைகளுக்கு நம் அருமைமக்களை அனுப்புங்கள். பாடசாலைகளுக்கு அனுப்ப முடியாத பெண்களுக்கு, இந்து மார்க்கப் பெண்களின் மூலமாகப் பாடங் கற்பியுங்கள். அதுவும் சௌகரியப் படாவிடில், அவரவர்களின் வீட்டிலிருக்கும் ஆடவர்களே உபாத்தியாயர்களாக விளங்கிக் கல்வியை அபிவிர்த்தி செய்யுங்கள். இன்றேல் உங்கள் குழந்தைகளுக்கும், குடும்பத்துக்கும், மார்க்கத்திற்கும், ஏன், தேசத்திற்குமே தீங்கு விளைவித்தவர்களாவீர்கள்; அன்னிய மதபோதகர்களிடம் நம் மக்களை அனுப்புவதால் உண்டாகும் தீங்குகளை நினைக்க நினைக்க ஆறாத்துயரமும், அளவற்ற கண்ணீரும் பெருகுகின்றனவே!

நம் அன்புமிகுந்த சந்தாதாரர்களே! ஐந்தாவதாண்டு முடியாமுன்னரே, ஏறக்குறைய பதின்மூன்றாயிரம் சந்தாதாரர்களின் மூலமாய், உலகத்தின் பல பாகங்களில் அநேக சீர்திருத்தங்களை உண்டாக்கும் நம் ஆனந்தச் செல்விக்கு பூரண ஆயுளைக்கொடுத்து, ஒவ்வொரு மாதமும் அதன் மதலைமொழிகளை நாம் அன்புடன் ஏற்று, அதன்படி நடந்து, நல்வழியைச்சார, எல்லாம் வல்ல பரம்பொருளை இன்றும் என்றும் தியானிப்போமாக! சுபம்.

K. A. P. விஸ்வநாதன்,
நெ. 53, தஞ்சாவூர்ரோட், திருச்சிராப்பள்ளி.

குறிப்பு:— மேல் கண்ட சங்கதி அதைக்காணும் ஒவ்வொரு இந்துவின் மனதிலும் தீயிட்டெரிக்கும் வேதனையினும் கொடிய வேதனையையுண்டாக்கு மென்பது நாம் கூறாமலே யமையும். இவ்விஷயத்தில் நம் இந்து சகோதர சகோதரிகளுக்கே நாம் சில விஷயங்களைக் கூறவேண்டியிருக்கிறது.

அக்கினிசாக்ஷியாக மணம் புரிந்த புருடனையும் தான்பெற்ற மைந்தனையும் பரதவிக்கவிட்டுச் சென்ற அம்மாது தான் புகுந்தமதத்தையே மெய்யான மதமென நம்பி அம்மதத்திற்காகவே குடும்பத்தை விட்டுச்சென்றாள் என்பது உண்மையாவெனச் சற்று சிந்திக்கும் பட்சத்தில், அது அடியோடு பொய்யென்றே வெள்ளிடை மலைபோல் விளங்கும். எவ்வாறெனின்

அம்மாதுக்குத் தன் சொந்தமதத்தைப் பற்றிய ஆராய்ச்சியே கிடையாது. அதையுணர்ந்து அதில் உண்மையில்லை யென்றறிந்த பின்பல்லவோ வேறொருமதத்தை யாராய்ச்சிசெய்து அதில் உண்மை யிருக்கிறதென்று உணர்ந்து அதில் போய்ச் சேரவேண்டும். மேலும் இன்னொன்று; அதாவது ஒரு மதத்தை யுண்மையென நம்பி அதில் போய்ச்சேரும் ஒருவர் பகிரங்கமாகவே செல்வதோடு தமக்கு அன்புள்ளவர்களையும் நோக்கி "அய்யோ! பொய்ம்மதத்தில் உழன்று அழிந்து போகிறீர்களே! இதோ ஆண்டவனே யருளிய சத்தியமார்க்கம் எனக்குக் கிடைத்திருக்கிறது. நீங்களும் வந்து இதில் சேருங்கள்" என்று அழைப்பார்களேயன்றி, கள்ளத்தனமாய் ஓடிவிடமாட்டார்கள். முதலாவது அவர்களைத் தம்மதத்தில் வந்து சேரும்படி போதிப்போரும் மதத்தில் சேர்த்துக்கொள்வோரும் பகிரங்கமாய்ச் சேர்த்துக்கொள்வார்களே யன்றிக் கள்ளத்தனமாய் ஒரு குடும்பத்திலுள்ள ஒருவன் மனைவியை அழைத்துக்கொண்டு ஓடிவிடவே மாட்டார்கள். நேயர்களே! குறைந்த அறிவுடையவர்களையும், சுலபத்தில் மயங்கிவிடக்கூடியவர்களையும் உலக சம்பந்தமான ஆசை வார்த்தைகளைக் காட்டிச் சுலபமாக மயக்கி விடலாம். இது அத்தகைய சங்கதியே யென்று நன்கு விளங்குகிறது. தன்னிடத்தில் விஷமிருப்பதையறிந்தே நாகப்பாம்பு மறைந்து வசிக்கிறது. அது போல் இத்தகைய காரியங்களைச் செய்வோர், இப்படிக் கள்ளத்தனமாய்ச் செய்வதாலேயே, தங்கள் செய்கை நியாய விரோதமானதென்றும், உண்மை யற்றதென்றும் அறிந்தே செய்கிறார்கள் என்பது நன்கு விளங்குகிறது.

அந்தோ நமது பெண் மக்களுக்கும் மாதர்களுக்கும் கல்வி கற்பிக்கிறார்களென்று மூடத்தனமாய் நாம் கருதிக்கொண்டு நமது வீட்டிற்குள் வரவிடும் இப்பெண் பேய்கள், வயிற்றின் கொடுமைக்காகத் தங்கள் குருமாரின் தூண்டுதலாலேயே இக்கொடும்பாபச் செயல்களுக்குத் துணிகிறார்கள். இவ்வுலகில் இவர்கள் தண்டனை யடையாமல் தப்பித்துக்கொண்டாலும் மறுமையில் ஆண்டவனால் கட்டாயம் தண்டிக்கப் படுவார்கள் என்பது பின்காணும் காரணங்களால் சொல்ப அறிவுள்ளவர்களுக்கும் நன்கு விளங்கும்.

எல்லா மதங்களும் கடவுளுக்குச் சம்மதமே. அவை கூறும் வழிகளில் பேதமிருந்தாலும் முக்கிய கருத்து யாவற்றிலு மொன்றே. எல்லா மதங்களுக்கும் கடவுளும் ஒன்றே. எவன் இன்னொருவனை நோக்கி "உன் மதம் பொய், உன் மதத்தில் கூறப்படும் கடவுள் பொய்" என்கிறானோ அவன் மதத்தில் ஞானமார்க்கம் சரியாக நிரூபிக்கப்படவில்லை யென்பதும் அவனும் ஞானமென்ப தின்னதென் றுணரான் என்பதும் நிச்சயம். ஆகையால் மதத்தைப்பற்றி நாம் ஒன்றும் கூறவில்லை. இவர்கள் நடக்கை கடவுளுக்கு ஒவ்வாத நடக்கையே என்று நாம் நிரூபிக்கிறோம். நேயர்களே! மேலே நாம் பேய்கள் என்று கூறியதை நீங்கள் வசைமொழியாகக் கருதலாகாது. ஏனெனில்,பேய்களே பிறரின்மனோ வேதனையையும் துயரத்தையும் பார்த்துச் சற்றும் இரக்கங்கொள்ளாமல் அவர்களுக்குத் துன்பஞ்செய்யத்துணியும் மனமும், உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யும் குணமும் உடையவை. இவர்கள் செய்கை யவ்வாறே யிருப்பதால் நாம் அப்பெயரிட்டுக் கூறினோம்.

நமது மார்க்கத்தின்படி சதிபதிகளிருவரும் மரண பரியந்தம் நாம் ஒற்றுமையடைந்து ஒன்றாய் வாழவேண்டியவர்கள் என்று பரஸ்பர அன்புடையவர்க ளாகிறார்கள். அப்போது அந்த ஆடவன் தன் மனைவியின் மேல் எத்தகைய அன்புடையவனா யிருப்பான் என்பது நாம் கூறாமலே விளங்கும். அதோடு அவன் தன்மனைவியைக் காணாது வருந்தி அதன்பின் நடந்து கொண்ட மாதிரியால் அவன் அன்பு பிரத்தியக்ஷமாகவே விளங்குகிறது. அத்தகைய மனைவியை யிழந்து அவன் மனம் என்ன வேதனைப்பட்டிருக்கவேண்டும். தாயை யிழந்த தன் மைந்தன் அம்மா! என்றழும்போது தந்தையாகிய இவன் மனம் என்னபாடுபட் டிருக்கவேண்டும். இதை வாசிக்கும் சகோதரர்கள் ஒவ்வொருவரும் அத்தகைய துர்ச்சம்பவம் தமக்கே நேர்ந்ததாகச் சற்று சிந்தித்துப் பார்த்தால், அம்மனோவேதனை யெவ்வளவு கொடியதென்று அனுபவமாக உணரலாகும். அந்தோ! தாயைப்பிரிந்து கதறும் அக்குழந்தையின் பரிதாபம் எத்தகையது! கடவுளே! அதைநினைக்கும் போதே நம்மனம் பதைக்கிறதே. இக்கோரக் காட்சியான சரித்திரத்தைக் கேட்கும் போதே ஒவ்வொரு இந்துமட்டுமல்ல, சீவகாருண்யம் என்ற மனித குணமுடைய ஒவ்வொருவர் மனமும் தீயிலிட்ட புழுப்போல் துடிக்காம லிருக்குமோ!

பாபம் என்பது என்ன? ஒரு சீவனுக்கு வருத்தத்தை யுண்டாக்குவதே பாவமாகும். ஒரு குடும்பத்தையே யழித்து அம்மனிதனும் குழந்தையும் என்றும் மனங்கலங்கிக் கதறி யழுதுக்கொண் டிருக்கும்படி செய்வதை விடப்பெரும்பாதகம் வேறென்ன? ஒருசமயம் அவர்கள் ஆண்டவன் கட்டளைப்படி அப்பெண்ணுக்கு எங்கள் மதத்தைப் போதித்தோம் என்று மனமொன்று வாக்கொன்றாய்க் கூறலாகும். அப்பெண் மதத்தையு மறியாள் மதியையுமறியாள் என்பதே யுண்மை. அம்மங்கை கள்ளத்தனமாக வீட்டிலிருந்து அழைத்துப் போகப்பட்டதும், பிறகும் அவள் கணவன் அவளைக் காணவொட்டாது தடுக்கப்பட்டதும், பிறகு திருச்சிராப்பள்ளியில் மேலே கூறப்பட்டபடி ஒரு குரு "நீ பொறுமையாக விரு...பிறகு உன் மனைவியை யுன்வசம் ஒப்பிவிக்கிறேன்" என்று கூறிப் பிறகு ஏமாற்றி விட்டதும், ஆகிய இந்நடக்கைகளால் அம்மாது மதத்தை நம்பிச் செல்லவில்லை யென்று மூடனுமறியலாம். அப்படி நம்பியது உண்மையாயின் கணவன் அவளைக்காண விடப்படாமல், அவள் மறைவிலேயே வைக்கப்படவேண்டிய அவசியமேயில்லை. அந்தோ! "பதினெட்டு வயதாய் விட்டது" என்ற இக்காரணம் ஒரு பெரிய சாக்கான வேடிக்கையாகும். அப்படிச் சுயேச்சையாய் நடக்கக்கூடியவளைக் கள்ளத்தனமா யழைத்துப் போவதும், பிறகு அவள் தன் கணவனைக்கண்டு வார்த்தையாடாதபடி அவளை மறைத்துப் வைப்பதும் என்? அந்தோ அவள் தன் ஆயுள் பரியந்தம் "அய்யோ! மதி மோசம் போய் நான் இக்கதியானேனே" என்று மெல்லவு முடியாமல் விழுங்கவு முடியாமல் மன வேதனைப் பட்டு மடிய நேர்ந்தது மிக்க துக்ககரமான காரியம்.

குரு அப்படிச் செய்தது ஆச்சரியமல்ல. ஏனெனில் ஏசுமார்க்கத்தைச் சேர்ந்த இந்த வகுப்பார் மதஸ்தாபகராகிய அந்தக் கிருஸ்து நாதரின் கட்டளைப்படி நடப்பவர்க ளல்ல; அவர் கட்டளைகளைத் தங்கள் பிரியப்படி மாற்றிக்கொண்டவர்கள். விரிக்கின் பெருகும். ஆத்ம குருவுக்கு வேண்டிய குணங்களும் இவர்களிடம் இல்லை. உலகபோக பாக்கியம் எதிலும் ஆசை

யருமல் மற்ற ஜனங்களைப்போலவே எல்லா உலகசுகங்களையும் அனுபவிக்கும் ஒருவன் எப்படி மற்றப்பேர்களுக்கு மோக்ஷ வழிகாட்டியாவான்? பைபிலையோதிய தாலேயே இவர்கள் குருமா ராவதாயின் அம்மதத்தைச் சேர்ந்த எல்லாருமே குருமார் எனலாம். ஏசுநாதர் உலக போகங்களில் விருப்பு வைத்திருக்கவில்லை யென்ற உண்மையே இதற்கு அத்தாட்சியாகும். அந்தோ! அவர் எங்கேனும் "ஓ மண்ணிற்பிறந்து மண்ணுய்ப் போவான்களே! உலகில் மற்றபேர் கடவுள் என்று வணங்குவ தெல்லாம் பொய்க்கடவுள்; நீங்கள் வணங்குவதொன்றே மெய்க்கடவுள்; ஆகையால் மனைவியினின்று புருடனையும், தாயினின்று குழந்தையையும் பிரித்துவிட்டு, ஒரு குடும்பத்தைக் கலைத்து அவர்கள் மனமெரிந்து கண்ணீர் விட்டுக் கதறியழச் செய்துவிட்டு, அதிலிருந்து ஒருவரைக் கள்ளத்தனமாய்க் கொண்டுவந்து என்னுல் ஸ்தாபிக்கப்பட்ட மதத்தில் சேருங்கள்" என்று கூறியுளரோ? இத்தகைய பாபச்செயலே கடவுள் தண்டனைக்குத் தப்புவதாயின், ஆண்டவன் நீதிமான், சர்வ வல்லவர், பாரபட்ச மில்லாதவர் என்பது பொய்த்தல்லோ போய்விடும். இவர்களும் தாங்கள் பெறும் சம்பளம், தொழிலில் கீர்த்தி, முதலிய சுயலாபத்தைக் கருதியே யிவ்வாறு செய்கிருர்கள். உண்மையாக ஆண்டவனுக்கு வழிபட்டவர்கள் தமதுசெய்கையால் ஒருவர்க்கு மனவேதனை யுண்டாகும்படி செய்யவேமாட்டார்கள்.

நம் சகோதர சகோதரிகளே! இனியேனும் நமக்குப் புத்திவருமோ! ஞானம் என்ற வார்த்தையின் பொருளைக்கூட அறியாதவர்கள் நம்மைப் பாவிகளென்று கூறிப் பாவத்தைக் கட்டிக்கொள்கின்றனர். ஆனுல் இதோடாயினும் எச்சரிக்கை யடைந்து செய்யவேண்டியதைச் செய்யாது விட்டால், நாம் பாவிகளல்ல—'படுபாவிகள்' என்பதிற் சந்தேகமே யில்லை. "இந்துக்கள் தம் மதத்தை உயிரினும் சிறந்ததாகப் போற்றுகிறவர்கள்" என்ற உண்மையை மறந்துவிடாதீர்கள். நமது மாதரையும் மக்களையும் உயிரோடு பறி கொடுத்து விட்டுப் பரதவிப்பது நமது மடமையே யாகும். இனியேனும்,

"நமது மக்களை அன்னிய மதம் போதிக்கப்படும் பாடசாலைகளுக்கு அனுப்புவதில்லை. அன்னிய மத மாதர்களைக்கொண்டு நமது பெண்களுக்குக் கல்வி போதிப்பதில்லை. அவர்கள் சகவாசத்திலிருக்க ஒரு விநாடியும் விடுவதில்லை" என்று ஆண்டவன் முன்னிலையில் சத்தியம் செய்து கொள்ளுங்கள். இன்றேல் நமது மதத்திற்கே துரோகம் செய்த பாபம் நம்மைப் பற்றிக் கொள்ளும். நமது மதத்தைக் காப்பாற்றுவதில் நாம் சிரத்தையெடுத்துக்கொள்ளா விட்டால் நம் முன்னோர்களது கடுஞ்சாபம் நம்மையழித்துவிடும். இப்போதனையை நம்மவர் ஒவ்வொருவருக்கும் வலியக் கூறி அனைவரும் எச்சரிக்கை யடையும்படி செய்வதற்கு வேண்டிய முயற்சியெடுத்துக் கொள்ளுங்கள். இவ்விஷயத்தில் ஆண்டவன் எப்படியும் உங்களுக்குப் பூரண உதவி செய்வார்.

ஓம் தத்ஸத்

பத்திரிகாசிரியர்.

சிறுவர்க்குரிய சிறந்த உபதேசங்கள்.

குணம் மூவகைப்படும். அவை சத்துவம், இராஜஸம், தாமஸம் என்பன. சத்துவ குணத்திலிருந்து ஞானம் உண்டாம். இராஜோ குணத்திலிருந்து உலக ஆசை மிகுதியாம். தமோ குணத்திலிருந்து அஜாக்ரதை,

சோம்பல்,நித்திரை,அஞ்ஞானம் இவையுண்டாம். ஆகையினால் எவன்சத்துவகுண முடையவனா யிருக்கின்றானோ அவனே ஞானத்தினாலே அடையத்தக்க முத்திக்குரியவைகளை நாடுகின்றான். எவன் இராஜோ குணம் மேலிட்டவனா யிருக்கின்றானோ அவன் தன் ஆசைக்கியைந்த கருமத்திலே பிரவேசித் துழன்று இறப்பதும் பிறப்பதுமாகிய இடரினையடைகின்றான். எவன் தமோகுணம் மேலிட்டவனா யிருக்கின்றானோ அவன் அறியாமை யென்கிற அந்தகாரத்தி லாழ்ந்து மனம்போன வழியி லுழன்று ஈனப் பிறவிகளை யடைந்து துன்புறு கின்றான்—என்னுமிவை பெரியார் கூறும் அநுபவ வசனங்களாம்.

ஆதலின், எல்லோரும் சத்துவகுணம் அபிவிருத்தியாகும் வழியாகப் பாடுபட வேண்டியதே கடமையாகு மென்றுணர்க.

காரணமின்றி மண்ணாங் கட்டியைப் பொடி பண்ணாதே! அடிக்கொரு தரம் துரும்பு கிள்ளாதே! துரும்பைக் கடித்துத் துப்பாதே! கை நகத்தைக் கடித்துத் தின்னாதே; கோட் சொல்லாதே— என்னும் இவை கட்டளை யாகும். இக் கட்டளைகளை அலட்சியம் செய்பவர்கள் இக்காலத்தில் பெரும்பான்மையார் இருக்கின்றனர். பெரும்பாலும் ஆங்கிலம் படித்து ஒழுக்க இலக்கணம் பயிலாத மாணவர்களிடத்தும் உத்தியோகஸ்தரிடத்திலும் நகத்தைக் கடித்துத் துப்புவதை நாம் காண்கிறோம். அச்சமயம் அவரிடம் நமக்குண்டாகும் அருவருப்பு இவ்வளவு அவ்வள வென்று சொல்லமுடியாது. இது பயனில்லாத செய்கை யென்பதையும் அருவருக்கத்தக்க செய்கை யென்பதையும் அவர்க ளுணர்கிறார்க ளில்லை போலும் என்று நினைக்க வேண்டிய தாகிறது.

அப்படியல்ல. அவர்கள் இது செய்யத் தகாத செய்கையென்பதை உணர் கின்றார்கள். ஆயினும் இவ்வழக்கம் சிறு வயதிலிருந்து தொடங்கியதாதலின் அதனைக் கைவிட முடிவதில்லை. இவ்வழக்கம் அவர்களை அறியாமலே உண்டாவ துண்டு. அறிந்த சமயம் உடனே உணர்கின்றார்கள். வருந்து கின்றார்கள். ஆதலின் இது கொடிது. அன்றியும். இப்படிப்பட்ட வழக்க முடையவர்கள் வறுமை யென்னும் பேயின் வசமாய் வருந்துவார்கள் என்றும் சொல்லப் படுகிறது. ஆதலின் சிறுவர்கள் இவ்வழக்கத்திற் குள்ளாகாதவழியில் நடந்து கொள்வதே நலம்.

போனகமென்பது தானுழந் துண்டல் என்பது போதனை. ஆதலின் ஒவ்வொருவனும் தன்னாலியன்ற வரையில் பிரயாசைப்பட்டு உழைத்துப் பொருள் தேடியே சாப்பிட வேண்டும். அதுதான் போஜன மென்று சொல்லப் படும். பிறர் கைச்சாப்பாட்டிற்குக் காத்திருப்பது பகுத்தறிவுடைய மனிதனின் செய்கை யாகாது. நமக்கேன் கடவுள் அறிவையும் ஆற்றலையும், கை கால்களையும் கொடுத்திருக்கின்றார் என்று யோசிப்பவர்களுக்கு இந்தக் கீழான எண்ண முண்டாவ தரிதாகும். பிறர் கைச்சாப்பாடு எவ்வளவு மேன்மையுடைய தாயினும் தான் உழைத்துச் சாப்பிடும் சாப்பாட்டைப்போ லிராது; மனதிற்குப் பிடிக்காது, தேகத்திலும் ஒட்டாது. சிலர் சோம்பலுக்குள்ளாய்ப் பிறர் கைச் சாப்பாட்டுக்குக் காத்துக்கொண் டிருக்கின்றனர். இது பெரிய இழிவான செய்கையாம். இப்

படிப்பட்ட பிறவியை எடுப்பதினும் நாய் நரி கழுதை முதலியவைகளாய்ப் பிறப்பதே மேன்மையாம்.

உலகம் பலவிதம். உலகத்தைத் திருப்தி செய்ய நம்மா லியலாது. ஆகையால், பெரியோர் கூறிய வழியினின்று பிசகாமலும் மனச் சாட்சிக்கு விரோதப் படாமலும் நடத்தலே தகுதியாம். ஆனால் சர்வ வல்லமையுள்ள தெய்வத்திற் கஞ்சி நடப்பதைக் கடமையாகக் கொள்ள வேண்டும். பொய்யைத் தள்ளி மெய்யைத் தழுவுங்கள். இதுவேபுத்திமானுக் கழகு.

தீயவனொருவன் சிறந்த கல்விமானானாலும் அவனை நீக்க வேண்டும். அவனுறவு கூடாது. அதனால் அல்லல் பல வுண்டாகும். மாணிக்கத்தைச் சிரசிலே கொண்டதுதானே என்றெண்ணிப் பாம்பொடு பழகலாமா?

பிறர் புத்தியை நாடி நடப்பவன் ஞானமில்லாதவனாவான். பெண் புத்தியை நாடி நடப்பவன் பெண்ணினும் இழிந்தவனாவான். அன்னியரை எதிர் பார்ப்பவன் அதமனாவான். தனக்குத் தன் கையே துணையென்பது பழமொழியல்லவா? யோசனை யில்லாதவன் துன்பமடைவான். ஆராய்ந்து கொள்ளாத நட்பினால் அவதி யுண்டாம். ஆகையினால் இவ் விஷயங்கள் நன்கு கவனிக்கத் தக்கனவாம்.

வரகவி திரு-சுப்ரமண்ய பாரதியார், சென்னை.

உபாத்தியாயர்களின் சம்பளம்.

நேயர்களே! ஆரம்பக் கல்வி விஷயமாக நமது சஞ்சிகையில் பன்முறை யெழுதியபோது மேற்படி உபாத்தியாயர்களின் சம்பளக் குறைவைப்பற்றி முறையிட்டுக்கொண்டிருக்கிறோம். இப்போது எலிமென்டரி பாடசாலை உபாத்தியாயர்களுக்குக் குறைந்த சம்பளம் முப்பது ரூபாய் என்று நம் காருண்ணிய துரைத்தனத்தார் ஏற்பாடு செய்திருப்பதை யறிய மிக்க சந்தோஷ மடைகிறோம். அந்த ஏற்பாட்டின்படி 3-வது பாரம் வரையில் ஸ்டாண்டர்ட் எடுகேஷன் இல்லாதவர்களுக்கு 30 ரூபா கொடுக்கப்படாதென்றும், 6 ரூபா அலவன்ஸ்மட்டும் அவர்களுக்குக் கிடைக்கும் என்றும், புதிதாய் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிற பாடசாலையில் படித்துத் தேறுகிறவர்கள் 30 ரூபாய்க்கு அருகரென்றும் தெரிகிறது.

இதில் "3-வது பாரம்வரை ஸ்டாண்டர்ட் எடுகேஷன் இருப்பவர்கள்" என்பதைப்பற்றியும், இது சம்பந்தமான இன்னும் இரண்டொரு விஷயங்களைப்பற்றியும் உள்ள சில சந்தேகங்களை நிவர்த்திக்குமாறு வட ஆற்காடு, திமிரி உபாத்திமார் சங்கத்தின் காரியதரிசியும், அங்குள்ள பாடசாலையின் தலைமை உபாத்தியாயருமாகிய ம-ா-ா-ஸ்ரீ, A. சங்கர அய்யர் அவர்கள் நமக்கு எழுதியிருப்பதால், மற்றபேர்களும் தெரிந்துகொள்ளும் வண்ணம் கீழ்க்கண்ட விஷயங்களை யறிவிக்கிறோம்.

1. மூன்றாவது பாரம்வரை படித்திருந்தால் போதாது. அதில் தேறி யிருக்கவேண்டும்.

2. இத்துடன் ஹையர் எலிமென்டரி கிரேட் ஸர்டிபிகேட்டும் வேண்டும்.

3. லோயர் எலிமெண்டரி கிரேட் ஸர்டிபிகேட் உடையவர்களாயின், பிறகு 3.வது பாரம் படித்துத் தேறியிருந்தால் போதும்.

4. 1907ஹூ முதல் 1913ஹூ வரையில் இரண்டு கிரேட்டுகளுக்கும் கேள்வி ஒன்ருகவே இருந்ததோடு ஸ்டாண்டர்ட் எடுகேஷன் 3-வது பாரத்திற்குச் சமமாகவே நடத்திவந்திருந்தார்கள். அதனுல் 1907 முதல் 1913 வரையில் பாஸ் செய்திருக்கிற உபாத்தியாயர்களுக்கு விலக்கு எற்படும். ஏனென்ருல் லோயர் ஸகண்டெரியில் தேறினவர்களுக்குப் படிப்பு அதிகம்.

நமது நண்பர் 3-வது பாரம் பாஸ் செய்யாதவர்களும், அதில் வாசிக்காதவர்களும், அதற்கும் கீழ்த்தரக் கல்வி கற்ருேரும் ஹையர் எலிமென்டரி கிரேட்டில் சேர்ந்து சர்டிபிகேட் பெற்றிருக்கிருர்களே, அவர்கள் எப்படி கவனிக்கப்படுவார்கள் என்கிருர். நாம் விசாரித்த வரையில் அம்மாதிரி சம்பவம் நேரிட்டிராதென்றே அறிகிருேம்.

பத்திரிகாசிரியர்.

"சந்தாதாரர்களுக்கு"

ஓர் முக்கிய அறிவிப்பு

நமது சந்தாதாரர்கள் நம் "ஆனந்தன்மேல் மிக்க அன்புடையவர்கள் என்பதும், சஞ்சிகையின் அபிவிர்த்தியில் விசேஷசிரத்தை யெடுத்துக் கொள்கிறவர்களென்பதும் நாம் மனப்பூர்வமாய் அறிந்தவிஷயம். எப்போதும் அதற்காக நாம் அவர்களுக்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிருேம். அடுத்த ஆனிமாதத்தோடு 5 வது வருடம் முடிந்து 6 வது வருடம் பிறக்கப்போவதால் தங்கள் நண்பர்களைச் சந்தா தாரர்களாகச் சேரும்படி சிபாரிசுசெய்ய இது தக்க சமயம் என்று நினைப்பூட்டுகிருேம்.

நமது சஞ்சிகையில் மாணவர்கள், உபாத்திமார்கள், மாதர்கள் முதலியவர்களுக்கு நன்மையளிக்கத் தக்க பலவிஷயங்கள் பிரசுரிக்கப்படுகின்றன வென்பது யாவரும் அறிந்தவிஷயமே. அனேகம் மாணவர்களும் உபாத்திமார்களும் இதில் சந்தாதாரர்களாக விருக்கிருர்கள். அனேகம் உபாத்திமைச் சங்கங்களிலும் ஆனந்தனை வரவழைக்கிருர்கள். ஆயினும் நம் தமிழ்நாட்டிலுள்ள மாணவர் உபாத்திமார் இவர்களில் இன்னும் சந்தாதாரராய்ச் சேராதவர்கள் தொகையை நோக்கும்போது, சேர்ந்திருப்பவர்கள் மிகக் கொஞ்சமென்றே உணரலாகும். அனேகம் உபாத்திமார்களும் உபாத்திமார் சங்கங்களும் இன்னும் சந்தாவில் சேராமலேயிருக்கிருர்கள். அவர்களையும் சேரும்படியாக, இப்போது சந்தாதாரர்களாக விருக்கும் உபாத்தியாயர்களாகிய நேயர்களை நாம் வேண்டிக்கொள்கிருேம்.

இதுமட்டுமல்ல; போர்ட் பாடசாலைகளின் உபயோகத் திற்காக ஆனந்தபோதினியை வரவழைக்க வேண்டுமென்று கள்ளக்குரிச்சி ரேஞ்சு

ஸப் அஸிஸ்டென்ட் இன்ஸ்பெக்டர் அவர்கள் சிபாரிசுசெய்ததின் பேரில் கள்ளக்குரிச்சி தாலூக்காவிற்கு 3 பிரதிகளும், திருக்கோயிலூர் தாலூக்காவிற்கு 3 பிரதிகளுமாக 6 பிரதிகள் அனுப்பி வரும்படி திருக்கோயிலூர் தாலூக்போர்ட் பிரஸிடென்ட் நமக்குக் கட்டளை யனுப்பியிருக்கிறார். அதன் நகலை யிதனடியிற் காணலாகும்.

மற்ற உபாத்திமார்களும் உபாத்திமார் சங்கங்களும் நமது மக்களின் நன்மையையும் தாய்ப்பாஷையின் அபிவிர்த்தியையும் கருத்தில் வைத்து தக்க முயற்சி யெடுத்துக்கொண்டு தங்கள் தங்கள் இன்ஸ்பெக்டர்களுக்கு மனு செய்துகொண்டு பாடசாலைகளுக்காக ஆனந்தனை வரவழைக்கும்படி செய்தால் நம் தாய்நாட்டிற்கு ஒரு முக்கிய நன்மையைச் செய்தவர்களாவார்கள். கருணாநிதியாகிய பரமன் உங்கள் முயற்சி நிறைவேறுமாறு பூரண அருள்பாலிப்பார்.

ஓம் தத்ஸத்

தாலூக்போர்ட் உத்தரவின் நகல்.

Tirukoilur.

Extract from the proceedings of the Taluk Board passed at a meeting held at Tirukoilur on 8—3—20.

Resolution No. 6.

Read letter of the Sub Assistant Inspector of Schools Kallakkurcihi Range R. O. C. No. 221 of 19 dated 26—1—20. recommending that 3 Copies of the Journal styled Ananda Bodhini may be supplied for the use of the Board Schools in his Range.

Read also note of the Vice President Dated 10—3—20 to send 3 Copies for Kallakkurichi Taluk, & 3 Copies for Tirukoilur Taluk with effect from 1—4—2.0 (*Annual subscription for the Journal is Re. 1-0 0.*)

Sanctioned.

Con. $\frac{257}{\text{T.B.}}$ of 2o. (Sd.) V. Ramaswami Aiyer,

President.

(True Copy)

Forwarded to the Manager Ananda Bodhini Office, Sowcarpet Madras. He is required to send 6 Copies of the Journal from 1—4—20.

(Sd.) (Illegible.)

For President,

Tk. Bd. Tirukoilur,

(True Copy.)

பத்திரிகாசிரியர்,

கற்கோட்டை—நாவல்

(480-ம் பக்கத்தொடர்ச்சி)

ஷண்பகவல்லி மிக்க கெம்பீரமான அழகுடையவள். அவளுக்கு வயது சுமார் 22 ஆகிறது. அவள் மிக்க செல்வவந்தரான ஸர்தார் நேமிதாதர் என்ற பிரபுவின் புத்திரி. அவள் இராணியின் தோழிகளில் ஒருத்தியா யிருந்தவள். அப்படிப்பட்டவள் கடந்த ஒருவருடமாய் இந்த வசந்த மாளிகையில்சிறைவைக்கப் படும்படி என்னவிதமாய் இராணியின் கோபத்திற் காளானாள் என்பது கதைப் போக்கால் போகப் போக விளங்கும். இவர்கள் மூவரும் தோட்டத்தைக் கடந்து அடர்ந்த விருட்சங்களின் மறைவிலேயே அந்தப் புதுநண்பர் இருக்கும் சிறுதோப்பைச் சேர்ந்தார்கள். அங்கு நிர்ச்சந் தடியா யிருந்தது. அவர்கள் அந்த நண்பரின் சமீபத்தில் செல்லும்போது சகோதரர்க ளிருவரும் ஷண்பகவல்லியை முன்செல்லவிட்டுச் சற்று பின்னடைந்தார்கள். ஷண்பகவல்லி தன் காதலன் முகத்தைக் கண்டதே “ஆ! சத்தியசேகராம்!” என்று ஆவலோடு முன்பாய்ந்தாள். மறு நிமிடம் காதல ரிருவரும் ஆலிங்கனத்திற் கட்டுண்டார்கள்.

சத்தியசேகரம் என்ற நாமதேயத்தைக் கேட்டதும் சகோதரர் இருவரும் ஆனந்தமும் ஆச்சரியமு மடைந்து ஆகாவென்று சத்தமிட்டார்கள். ஏனெனில் ஸர்தார் சத்தியசேகரன் என்பவன் வீரத்தனம், சத்தியவாக்கு, சினேகவாஞ்சை, நேர்மை, தைரியம், அண்டினவரைக் கைவிடாது சுய நலங்கருதாது எந்த விதமேனும் காப்பாற்றும் உதாரகுணம், முதலியவற்றால் தேசம் முழுதும் பிரசித்தி பெற்றவன். அவன் பெயரைக் கேள்விப் படாதவரே யில்லை. அவனும் இராணியின் வெறுப்பிற்குத் தற்சமயம் அகாரணமாய்ப் பாத்திரனாகியே இருப்பவன்.

காதலரின் பொங்கிய சந்தோஷம் சற்று தணிந்த பின், சத்தியசேகரன், “ஆ என் அன்பே! கடவுள் தயவால் கடைசியில் சந்தித்தோம்” என்றான்.

ஷண்பகவல்லி.—ஆம். ஆம். ஆகா! அந்தப் பொறாமையும் கடுஞ்சித்தமுமுடைய மூர்க்க இராணி......

சத்தியசேகரன்.—ஆ! ஆ! இந்தத் தனியிடத்தில்கூட இதைப் பேசலாகாது. ஆகா! அன்று மாலை அரண்மனைத் தோட்டத்தில் இருவரும் சந்தித்துச் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருந்தோம்; மறுநாட் காலை நீ எங்கோ தூரத்திலுள்ள வொருவிடத்திற் கொண்டுபோய் சிறை வைக்கப்பட்டாய் என்று கேட்டதே என்னதுயரம்! என்னதுயரம்! ஒருபக்கம் நானோ...

ஷண்.—அந்தோ! உமக்கென்ன நேர்ந்தது? ஐயோ கடவுளே! இந்தத் துக்ககரமான விடத்தில், அப்பயங்கரமான கல்மனமுடைய கொடுஞ் சூரியின் காவலில் அடைக்கப்பட் டிருக்கும் எனக்கு வெளியில் நடக்கும் எந்த சமாசாரத்தையும் அறியச் சக்தியில்லையே. எப்படியாயினும் நமது காதலர் நாமிருக்கு மிடத்தைக் கண்டுபிடித்து வந்து நம்மை எந்த விதமாகவேனும் மீட்டுக்கொண்டு செல்வார் என்ற ஒரு நம்பகமே இத் தீராத்துயரைச் சகித்துக்கொண்டிருக்க எனக்குச் சக்தி யளித்தது.

சத்தி—ஆ! என் காதலியே! எனக்கு நீ யிருக்குமிட மட்டும் முன்னமே தெரிந்திருந்தால், இந்த ஒரு வருடமாய் நான் உன்னை இச்சிறையில் இருக்கவிட் டிருப்பேனா? அந்தோ! இன்று அதிகாலையில்தான் நீ யிருக்குமிடம் எனக்குத் தெரியவந்தது. அன்று நீ சிறையாக்கப்பட்ட சங்கதியை உன் சினேகியாகிய கோகிலம்மாள் எனக்குத் தெரிவித்தாள். அதே சமாசாரத்தோடு, "இராணியின் எதிரில் நீர் வரவேண்டாம். ஏனெனில் உங்கள் மேல் மிக்க கோபங் கொண்டு உங்களைச் சிரச்சேதம் செய்வதாய்ப் பிரதிக்கினை செய்துகொண் டிருக்கிறாள்" என்று எழுதியிருந்தாள். அதனால் நான் உடனே ஏகாங்கியாய் நகரை விட்டுக்கிளம்பித் தலைமறைவாகவே வடநாடுகளிலே அலைந்துகொண் டிருந்தேன். என்னைத் தேடிப் பிடிக்க முயலவில்லையேனும் அந்த இராக்ஷசியின் கருணையற்ற மூர்க்கத்தனம் எவ்வளவு தூரம் செல்லுமோ எப்படி யறியலாம். ஆனால் கடைசியில் இப்போதுதான் திடீரென்று எனக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது. எனக்கும் ஸர்தார் இராஜநாயகத்திற்கும் முன்னமே நட்புண்டு. அது வரவா மிக்க மனமொத்த நேசமாய் முதிர்ந்து விட்டது. இப்போது அவன் மந்திரிகளில் ஒருவனாக விருக்கிறான். மூன்றுவாரங்களுக்கு முன் அவன் உள்நாட்டு மந்திரி பதவிக்கு உயர்த்தப்பட்டான். அந்த அன்பன் உடனே தன் அதிகார பலத் தாலும் செல்வாக்காலும் எனக்கு உதவி செய்யத் துணிந்து, முதலாவதாய் நீ சிறைப்பட் டிருக்கு மிடத்தைக் கண்டு பிடித்தான். இன்று காலைதான் அவனிடமிருந்து எனக்குக் கடிதம் வந்தது. முதலாவது, உன் இருப்பிடம் தெரிந்தது ஒரு சந்தோஷ சங்கதி. இரண்டாவது, எனக்கு இராணியின் மன்னிப்பு கிடைத்ததோடு, இப்போது காப்டென் தினகரன் சிறையாக்கப்பட்டதால், காலியாயிருக்கும் இராணியின் மெய்க்காப்புப் படையின் தலைமைக் காப்டென் உத்தியோகம் எனக்கு அளிக்கப்பட் டிருக்கிறது.

ஷண்ப.—அட கெட்டகாலமே. மறுபடியும் அந்தக் குரூர நெஞ்சமும், வஞ்சமும், பாலிய வயதுடையவள் போல் அபிநயிக்கும் பிலுக்குப் பகட்டும் உடைய நன்றி கெட்ட இராஜாத்தியிடமா சேவகம் செய்யப் போவது!

சத்திய.—இனியவளால் ஒன்றும் செய்ய முடியாது. எங்கள் கட்சிக்கு நன்றாய்ப் பலங்கட்டிக்கொள்ளும் சமயம் வாய்ந்திருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாடுக ளனைத்தும் என் மனதில் முன்னாடியே யமைந்திருக்கின்றன. நீ பயப்படவேண்டாம். முதலாவது உன்னை விடுதலையடையச் செய்வதே அதற்கத்தாட்சி.

ஷண்ப.—அந்தோ! நான் மறுபடி அந்தச் சிறைச்சாலைக்கா போகவேண்டும்? என்னை யிப்போதே கூட்டிக்கொண்டே போய்விடலாகாதா?

சத்தி.—அந்தோ! வேண்டாம், வேண்டாம். கொஞ்சம் அவசரத்தால் எல்லாக் காரியங்களும் அடியோடு கெட்டுவிடும். கொஞ்சகாலம் மிக்க சாக்கிரதையோடு நாம் நடந்துகொள்ள வேண்டும். அதுகாறும் நீ சற்று பொறுமையோடு காலத்தைக் கழிக்கவேண்டும்.

ஷண்ப.—"ஆம். ஆம். வேறே வழியில்லை. இப்போது நமக்கு உதவிசெய்த இந்த நண்பர்கள் யார்?" என்றாள்.

அதன்மேல் சத்தியசேகரன் அவர்கள் இன்னாரென்பதைப் பற்றியும் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றியும் விவரமாகக் கூறினான்.

ஷண்ப.—என் தந்தை சங்கதி ஏதாவது தெரியுமோ? அச்சண்டாள அரசி அவருக்கு என்னைப்பற்றி என்ன பொய் வதந்தி யனுப்பி யிருக்கிறாளோ?

சத்தி.—"ஆம் ஆம். நீ என் இரகசிய மனைவியாய் விட்டதாய்ச் செய்தி யனுப்பி யிருக்கிறாள். இருக்கட்டும். அரசரைத் தண்டிக்க ஒரு ஒப்பற்ற அரசருளர். உன்னை யவள் அவமானப் படுத்தினால் சீக்கிரத்தில் கடவுள் அவளையே அவமானத்திற் குள்ளாக்குவார். சமீப காலத்தில் நான் கேள்விப்பட்ட வரையில் உன் தந்தை க்ஷேமமாகவே யிருக்கிறார்" என்றான்.

கடைசியில் மிக்க துயரத்தோடு ஒருவரை யொருவர் பன்முறை யாலிங்கனம் செய்துகொண்டபின் காதலரிருவரும் பிரிந்தார்கள். சகோதரப் பிரபுக்கள் இருவரும் ஷண்பகவல்லியை அழைத்துக்கொண்டு வசந்த மாளிகைக்குத் திரும்பினார்கள்.

31-வது அத்தியாயம்

மூவரும் மௌனமாகவே மாளிகைபோய்ச்சேர்ந்தார்கள். வேதநாயகியம்மாள் சகோதரர் இருவரையும் நோக்கி நீங்கள் முயற்சிசெய்த காரியம் எவ்வாறு நிறைவேறியது என்றாள். அதற்கவர்கள் "ஷண்பகவல்லி யம்மாள் திருப்தியோடு இராணியின் பிரியப்படி நடந்து கொள்வதாய் ஒப்புக்கொண்டாள்" என்றார்கள்.

அதன்மேல் அம்மூதாட்டி அவர்களைப் போஜனம் செய்யும்படி உபசரித்தாள். சகோதரர்களோ, சத்தியசேகரர் தங்களுக்காக காத்துக்கொண்டிருப்பா ராகையால் உடனே செல்லவேண்டுமென்று ஆவலுடையவர்களாயிருப்பினும், வேதநாயகி செய்யும் உபசாரங்களை ஏற்றுக் கொண்டால்தான் அவளுக்குத் திருப்தியா யிருப்பதோடு சந்தேகமும் உதிக்காமலிருக்கும் என்று சத்தியசேகரன் கூறியிருப்பதால், போஜனம் செய்ய ஒப்புக் கொண்டார்கள். உடனே ஆகாரம் வட்டிக்கப்பட்டது. இருவரும் உண்டு முடிந்ததே அம்மூதாட்டி, "சற்று பொறுங்கள், என்னிடம் ஒருவித உயர்ந்த பானம் இருக்கிறது. இதோ இரண்டு நிமிடங்களில் கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றாள்.

சகோதரர்க ளிருவரும் போஜன அறையிலேயே உட்கார்ந் திருந்தார்கள். சற்று நேரத்திற்குள் குதிரைகளின் காலடிச்சத்தம் அவர்களின் செவிகளிற் பட்டது. மூத்தவன் "ஆ! குதிரைகள் சத்தம்" என்றான். இளையவன் ஆம், ஆம், என்றெழுந்துபோய்ச் சாளரத்தில் நின்று பார்த்தான். பொழுதமர்ந்து விட்டதால் தூரப்பொருள்கள் புலப்படவில்லை. ஆயினும் நட்சத்திரங்கள் நன்றாய்ப் பிரகாசித்கொண்டிருந்ததால் தோட்ட

மும் அதைச் சுற்றிலுமுள்ள உயர்ந்த மதிற்சுவரும் மட்டும் புலப்பட்டன. ஏனெனில் அச்சாளரம் தோட்டத்தின் பக்கமாய்த்தா னிருக்கிறது. அதற்குள் மூத்தவன் "குதிரைகளின் காலடிகளைப்போலவே யிருக்கிறது; எதற்கும் எச்சரிக்கையாயிருப்பது நலம்; இந்தமாது சீக்கிரம் வருவதாய்க் கூறிச் சென்றவள் இன்னும் என்ன செய்கிறாள்? ஆ! குதிரைகளின் காலடி தெருவாசற்படியில் கேட்கிறது" என்றான். மறு நிமிடம் காலடிச்சத்தம் அடியோடு நின்றதும், தெருவாசற்படியிலுள்ள கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. இதனால் புதிதாக யாரோ வந்திருக்கிறார்களென்று தெரிந்தது. சகோதரரிருவரும் அப்படி யாபத்து ஏதேனும் நேர்ந்தால் உயிர் நீங்குமட்டு மேனும் போர்புரிந்தே தீருவதென்று துணிகரமாய்த் தீர்மானித்துக் கொண்டார்கள்.

சகோதரர் இருவரும் சுமார் பத்துப் பதினைந்து நிமிடங்கள் காத்துக் கொண் டிருந்தார்கள். இடையில் கலவரத்தை யுண்டாக்கத்தக்க குறிகளொன்றும் சம்பவிக்க வில்லை. இரண்டு மூன்று நிமிடங்கள் கழிந்ததே திடீரென்று அவசரத்தோடு கதவு திறக்கப்பட்டதும் ஷண்பகவல்லி உள்ளே தலை நீட்டி "ஓடி விடுங்கள்! ஓடி விடுங்கள்! அதோ சாளரம்; இதோ தோட்டக்கதவின் திறவுகோல்" என்று கூறிக்கொண்டே சாவியை வீசி விட்டுச் சென்றாள். சகோதரர் இருவரும் துரிதமாய்ச் சாவியை எடுத்துக் கொண்டு சாளரத்தருகில் சென்றார்கள். அங்கு வெளியில் ஆயுதம் தரித்த சில வீரர்கள் நிற்பதைக்கண்டு திடுக்கிட்டு நின்றார்கள். இப்போது அந்த வீரர்கள் வந்த வரலாற்றை முன்னே கூறிவிட்டுப் பின்பு கதையைத் தொடங்குவாம்.

வேதநாயகி சகோதரரை விட்டுச் சமையற் கட்டின் பக்கத்திலிருக்கும் உக்கிராண அறைக்குள் நுழைந்து வேண்டிய பானத்தை யெடுத்துக்கொண்டு திரும்பும்போது வேலைக்காரன் சென்று, "அம்மா! புதிதாய் விருந்தினர்கள் நகரத்திலிருந்து வந்திருக்கிறார்கள். உங்களை யழைக்கிறார்கள்" என்றான். வேதநாயகி வந்தவர்கள் இராணியினிட மிருந்தே வந்திருக்க வேண்டுமென்று உணர்ந்து துரிதமாய் முன்கூடத்திற்குச் சென்றாள். அச்சமயம் வந்தவர்களும் உள் நுழைந்து வருகிறார்கள். உயரமும், பயங்கர முகமுமான ஒரு கறுப்புத் தடித்த நீக்ரோ ஸ்திரீ, நெடுகப் போர்வை யணிந்து ஓர் கன்னிகையின் கையைப்பிடித்து அழைத்துக் கொண்டு வருவதையும், பின்னால் மூன்று படை வீரர்கள் வருவதையும் கண்டாள்.

அந்தக் குரூரமுகமுடைய மாது இராணியின் அந்தரங்க வேலைக்காரியாகிய துர்க்காளே. அவள் இப்போதும் அரசியின் இரகசியமான ஒரு கட்டளையை நிறைவேற்றவே வந்தாள். அவள் ஊமையென்று முன்னமே நேயர்களுக்குத் தெரியும். வேதநாயகியைக் கண்டதும் அவள் குறிப்பாய்த் தன்னுடன் வந்திருக்கும் கன்னிகையைச் சுட்டிக் காட்டினாள். மூதாட்டி அதை அறிந்து கொண்டதாய் சமிக்கை செய்துவிட்டு ஒரு வேலைக்காரியை யழைத்து அவள் வசத்தில் அக்கன்னிகையை யொப்பித்து, ஒரு அறையில் கொண்டுபோய்ச் சேர்க்கும்படி கட்டளையிட்டாள். அக்கன்னிகை அலுப்பாலும் சொல்லொணாத் துயரத்தாலும் ஆவி சோர்ந்திருந்தாள்.

(தொடரும்)

ஆறணி-குப்புசாமி முதலியார்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

ரௌத்திரி௵ ஆனி௴—சாலிவாகனம் 1841-கலியுகாதி 5020

பசலி 1328-29—கொல்லம் 1094-95 - ஹிஜிரி-1338-

இங்கிலீஷ் 1920-ம்௵ ஜூலை௴—ஆகஸ்டு௴

ஆனி௴	ஜூலை௴	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	14	தி	திர-45-40	பர-3-35	சி-3ம	கிருத்திகை
2	15	செ	ச-39-57	*கிரு-0-15	அ-சி-60	பிரயாணம், விவசாயம்
3	16	பு	●-33-51	மிரு-52-17	சி-60	
4	17	வி	பிர-27-35	திரு-47-50	ம-47அ	
5	18	வெ	து-21-24	புன-43-58	சி-43உ	
6	19	சனி	தி-15-44	பூச-40-25	சி-40ம	
7	20	ஞா	ச-10-25	ஆயி-3 -26	சி-37ம	
8	21	தி	ப-5-46	மக-35-7	மர-35சி	
9	22	செ	ஷ-1-56	சப்-57-15	சி-33அ	
10	23	பு	அ-57-15	உத்-33-22	அ-33ம	
11	24	வி	நவ-56-40	அஸ்-34-17	சி-60	
12	25	வெ	தச-57-28	சித்-36-21	சி-60	
13	26	ச	ஏ-59-28	சுவா-39-41	அ-39சி	நாற்றிட, பிரயாணம்
14	27	ஞா	து-60-0	விசா-44-10	உ-44ம	....
15	28	தி	து-2-59	அனு-49-40	சித்-60	கெர்ப்பாதானம்
16	29	செ	தி-7-2	கே-55-45	உ-55அ	பிரயாணம்
17	30	பு	ச-11-49	மூல-60-	மர-60	....
18	1	வி	○-16-52	மூல-2-27	சித்-60	கிழங்குகள் நட
19	2	வெ	பிர-21-41	பூரா-8-52	பி-8சி	வியாபாரம்
20	3	ச	து-25-53	உரா-14-48	சி-60	விவசாயம்
21	4	ஞா	தி-29-17	திரு-19-54	அ-19ம	உபநயனம், சீமந்தம்
22	5	தி	ச-31-4	அவி-24-4	சி-60	மீனம் கெர்ப்பாதானம்
23	6	செ	ப-32-35	சத-26-57	மர-60	....
24	7	பு	ஷ-32-29	பூட்-28-33	அ-சி60	விவசாயம்
25	8	வி	சப்-30-49	உத்-28-58	சி-60	வியாபாரம்
26	9	வெ	அ-28-7	ரே-28-15	அ-சி60	சீமந்தம், வியாபாரம்
27	10	ச	நவ-24-26	அசு-26-27	சி-60	பலவிருக்ஷம், நட
28	11	ஞா	தச-19-53	பர-23-52	பி-23சி	....
29	12	தி	ஏ-14-41	கிரு-20-43	ம-20அ	கார்த்திகை
30	13	செ	து-9-0	ரோ-16-42	அ-16சி	கடகம் பிரயாணம்
31	14	பு	தி-2-56	சது-53-48	சி-60	மிதுனம் விவசாயம்
32	15	வி	●-50-42	திரு-8-33	மர-8அ	கொடிகள் நட

(1920௵ ஜூலை௴ — printed vertically beside dates 1–15 of the second column)

	கே	சு	சூரி புத
	3-து-செ. 5-மிது-சு. 8-கட-புத. 29-கட சுக்		குரு
			சனி
	செ ராகு		

PRINTED AND PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.